விலை ரூபா 1.25

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 26 புரட்டாதி 4 ஜுலைகஜ் 23 இதழ் 218
யாழ்ப்பாணம் வியாழக்கிழமை 20-9-84

## சாவகச்சேரி தபாலகத்தில் நேற்று நடந்த கொள்ளை!

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி தபால் நிலையத்தில் நேற்று நண்பகல் துப்பாக்கி முனையில் சுமார் 12,000 ரூபா கொள்ளையடிக்கப்பட்டது.

நேற்று நண்பகல் 1 மணியளவில் துப்பாக்கியுடன் சென்ற 4 இளைஞர்கள் அங்குள்ள ஊழியர்களைப் பயமுறுத்தி விட்டு கொள்ளையை நடத்தியதாகக் கூறப்படுகிறது.

முத்திரையும், ரொக்கப் பணமுமாக சுமார் 12, 000 ரூபா கொள்ளையடிக்கப்பட்டதாக விசாரணையில் தெரிய வந்துள்ளது. கவுண்டரில் உள்ள பணத்தையும் எடுத்துச் சென்றதாகவும் கூறப்படுகிறது. (ஞ)

## கடத்தப்பட்ட மாணவர் வீடு வந்தார்!

[கல்வியங்காடு]

கடத்திச் செல்லப்பட்ட கல்லூரி மாணவன் காரில் வீடு வந்து சேர்ந்தார்.

கடந்த திங்கட்கிழமை நல்லூரில் உள்ள வீட்டிலிருந்து வானொன்றின் மூலம் இனந் தெரியாத நபர்களால் கடத்திச் செல்லப்பட்ட யோகரட்

[5-ம் பக்கம் பார்க்க]

# தமிழ்த் தலைவர்கள் இருக்கும் ஹோட்டலில் தீவிர சோதனை!

(கொழும்பு)

**கொழும்பில் முக்கிய தமிழ்த் தலைவர்கள் சிலர் தங்கியிருக்கும் ஹோட்டல் ஒன்று நேற்று தீவிரசோதனைக்கு உட்படுத்தப்பட்டது.**

**இந்த ஹோட்டலில் குண்டுகள் வைக்கப்பட்டிருப்பதாக தகவல் கிடைத்ததைத் தொடர்ந்தே இந்த ஹோட்டல் சோதனையிடப்பட்டதாக பொலிஸ் ஆணையாளர் திரு. நீல்வீரசிங்க அந்த அரசியல் தலைவர்களிடம் தெரிவித்தார்.**

நேற்று முன்தினம் முதல் இந்த ஹோட்டலில் சில முக்கிய அரசியல் தலைவர்கள் தங்கியிருக்கின்றனர். நேற்று முன்தினம் நள்ளிரவு 10-15 மணிக்கு அங்கு சென்ற ஆயுதந்தாங்கிய பொலிசார் சோதனையிட்டனர். பின்னர் 2-30 மணிக்கும், நேற்றுக் காலை 8-30 மணியளவிலும் இரண்டு தடவை தீவிர சோதனையிடப்பட்டது.

குண்டு வைக்கப்பட்டிருப்பதாக தகவல் கிடைத்ததைத் தொடர்ந்தே இந்தஹோட்டல் சோதனையிடப்பட்டதாக பொலிஸ் கமிஷனர் தெரிவித்தாராம்.

## ஜனாதிபதியைச் சந்திப்பர்

[கொழும்பு]

வடபகுதியில் அண்மையில் நடைபெற்ற சம்பவங்கள் குறித்து மகஜர் ஒன்றை தமிழர் விடுதலைக் கூட்டணித் தலை

[5ம் பக்கம் பார்க்க]

## மட்டு. பல்கலை கல்லூரியில் கொள்ளை!

[மட்டக்களப்பு]

மட்டக்களப்பு பல்கலைக்கழகக் கல்லூரியில் 'போட்டோஸ்ரட்' யந்திரம் கொள்ளையடிக்கப்பட்டுள்ளது.

நேற்று முன் தினம் அதிகாலை துப்பாக்கி இளைஞர்கள் சிலர் அங்கிருநத பாதுகாப்பு இன்ஸ்பெக்டர், 6 ஊளியர்களை பயமுறுத்திவிட்டு இக்கொள்ளையை நடத்தியுள்ளனர்.

பல்கலைக்கழக கல்லூரி ஆய்வுகூட கதவும் உடைக்கப்பட்டிருந்த போதிலும் எதுவித பொருட்களும் கொள்ளையடிக்கப்படவில்லையெனத் தெரிகிறது.

'டெலிக்கா' வான் ஒன்றில் வந்த இளைஞர்களே இக்கொள்ளையை நடத்தியதாகவும் கூறப்படுகிறது.

## குமார் ஆஜரானதால் ஆட்சேபம்

(கொழும்பு)

கொழும்பு மேலதிக நீதவான் நீதிமன்றத்தில் வழக்கொன்றில் வழக்காளி தரப்

(5ம் பக்கம் பார்க்க)

## 'ட்ரக்' கடத்தல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் 4-ம் குறுக்குத் தெருவிலுள் அமெரிக்க றூலிங் கம்பெனியிலிருந்து இரண்டேகால் லட்சம் ரூபா பெறுமதியான ட்ரக் (28 ஸ்ரீ 1920) துப்பாக்கி முனையில் கடத்திச் செல்லப்பட்டுள்ளது.

நேற்று நண்பகல் இனந்தெரியாத இரு நபர்கள், மேற்படி கம்பனிக்குச் சென்று சாரதியைத் துப்பாக்கி முனையில் பயமுறுத்தி ட்ரக்கை கடத்திச் சென்று விட்டதாக யாழ். பொலிசில் புகார் செய்யப்பட்டுள்ளது. (மா)

## கைவிடப்பட்ட நிலையில் 'ட்ரக்'

(யாழ்ப்பாணம்)

திருநெல்வேலியிலுள்ள தேசிய நீர்வழங்கல் சபைக்குச் சொந்தமான 'ட்ரக்' பருத்தித்துறையில் கைவிடப்பட்டநிலையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

கடந்த 16-ம திகதி இந்த ட்ரக் கடத்திச் செல்லப்பட்டது தெரிந்ததே. (மா)

## "பயங்கரவாத எதிர்ப்பு பிரேரணை: இந்தியாவும் ஆதரிக்கும்"
### அமைச்சர் அல்விஸ் நம்பிக்கை

(கொழும்பு)

பயங்கரவாதத்தைச் சர்வதேச ரீதியில் முறியடிப்பது தொடர்பான பிரேரணையை இந்தியாவும் ஆதரிக்கும் என்றுதான் நம்புவதாக ராஜாங்க அமைச்சர் கலாநிதி ஆனந்த திஸ்ஸ டி அல்விஸ் தெரிவித்தார்.

நேற்றைய அமைச்சரவைக் கூட்டத்தின் பின்னர் நடைபெற்ற பத்திரிகையாளர் மகாநாட்டில் இவ்வாறு நம்பிக்கை தெரிவித்தார்.

லண்டனில் நடைபெறவுள்ள பொதுநல அமைப்பு நாடுகளின் பாராளுமன்றக் குழுக் கூட்டத்தில் பயங்கர

(5-ம் பக்கம் பார்க்க)

## கொள்ளைகளின் எதிரொலி [redacted]
# வடக்குநீர்விநியோகவேலைகள் திடீர் நிறுத்தம்;
### 800 தொழிலாளர் வேலை இழக்கும் நிலை

[யாழ்ப்பாணம்]

அமெரிக்க- இலங்கை அரசாங்களின் நிதி உதவியுடன் வடபகுதியில் மேற்கொள்ளப்பட்ட நீர் விநியோகத்திட்ட வேலைகள் நிறுத்தப்படும் சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் அவ்வேலைகளில் ஈடுபட்டிருந்த சுமார் 800 தொழிலாளர்கள் வேலை இழக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது.

வடபகுதியில் முதல் கட்டமாக பருத்தித்துறை, சாவகச்சேரிப்பகுதிகளில் நீர்விநியோகத்திட்டவேலை ஆரம்பிக்கப்பட்டன. இதற்கென அமெரிக்க அரசு 9 கோடிரூபாவும், இலங்கை அரசின் நீர்வழங்கல் வடிகால் சபை 3 கோடி ரூபாவும் ஒதுக்கியிருந்தன.

தேசிய நீர்வழங்கல் அலுவலகத்தால் ஒப்பந்தம் கோரப்பட்டது. அமெரிக்க றூலிங் கம்பெனி இவ்வொப்பந்தத்தை பொறுப்பேற்று சமரக்கோன் கம்பெனி மூலம் வேலையை ஆரம்பித்தது.

1983 அக்டோபரில் சாவகச்சேரி. பருத்தித்துறைத் தொகுதிகளில் வேலைகள் ஆரம்பமானது.

அமெரிக்க உதவி ஸ்தாபனத்தின் திட்டப்படி 85 செப்டம்பரில் வேலைகள் முடிவுபெற வேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்டபோதிலு ஒப்பந்தகாரரர் 85 ஜுலையுடன் வேலைகளைப் பூர்த்தி செய்வதாக உறுதியளித்திருந்தனராம்.

நாட்டில் அடிக்கடி ஏற்பட்ட சம்பவங்களினால் தென் பகுதியிலிருந்து சில பொருட்கள் கொண்டுவருவதில் ஏற்பட்ட தாமதங்களினால் தண்ணீர்தாங்கு கட்டும் வேலைகள் தாமதமாகி வந்தன.

இரு தொகுதிகளிலும் நீர் செல்லும் பைப் வேலைகள்

(5-ம் பக்கம் பார்க்க)

## தடை நீங்கியது!

(கொழும்பு)

அவசரகால சட்டவிதிகளில் சில தவிர்க்கப்பட்டுள்ளதால் நவ சமசமாஜக்கட்சிக்கு விதிக்கப்பட்டிருந்த தடை நீக்கப்பட்டுள்ளது.

அதே நேரத்தில் மக்கள் விடுதலை முன்னணிக்கு விதிக்கப்பட்டுள்ள தடை தொடர்ந்து இருக்குமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

## வவனியா நகரில் குண்டுகள் வெடித்தன!

(வவனியா)

வவனியாவில் நேற்று பிற்பகல் இரண்டு மணிவரையிலான இடைவெளிக்குள் எட்டு குண்டுகள் வெடித்தன.

முதல் குண்டு காலை 8-30 மணிக்கு வெடித்தது. இதையடுத்து கடைகள் எல்லாம் இழுத்துப்பூட்டப்பட்டன. ஆனல் பொலிசாரின் கோரிக்கையின் மீது சில கடைகள் திறக்கப்பட்டபோதிலும் பின்னர் மூடப்பட்டன

குண்டுகள் தொடர்ந்து வெடித்துக்கொண்டிருந்ததால் வவனியா நகரில் சனநடமாட்டமும் சிறிது நேரத்தில் இல்லாமல் போய்விட்டது. பாடசாலைகளுக்கு மாணவர்கள் செல்லவில்லை. மினிபஸ்களும் ஓடவில்லை.

## 'அம்புலன்ஸ்' வண்டி கடத்தப்பட்டது!

(யாழ்ப்பாணம்)

யாழ். அரசினர் ஆஸ்பத்திரி அம்புலன்ஸ்வண்டி துப்பாக்கி முனையில் நேற்று மாலை கடத்தப்பட்டது

ஆஸ்பத்திரிக்கு வந்த இரு இளைஞர்கள், அம்புலன்ஸ் நிற்கும் இடத்திற்குச் சென்று அதனைக் கடத்திச் சென்றதாகக் கூறப்படுகிறது

அம்புலன்ஸ் சாரதி கடமை அறைக்கு அச்சமயம் சென்றிருந்ததாகவும், மேசையில்

(5ம் பக்கம் பார்க்க)

## பிந்திய செய்தி:
### அநாதரவான நிலையில் அம்புலன்ஸ்

(யாழ்ப்பாணம்)

யாழ் ஆஸ்பத்திரியிலிருந்து நேற்று பிற்பகல் கடத்தப்பட்ட 'அம்புலன்ஸ்' ஆனைக்கோட்டையில் நிற்பதாக நேற்றிரவு தகவல் கிடைத்துள்ளதாக ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவித்தன. (க)

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

Cross Broilers 4/50 சேவல் குஞ்சு 1/90. ராதாகிருஷ்ணாஸ் 392, நாவலர் வீதி, கயிலாச பிள்ளையார் கோவில். 1804

GTO மொடல் நல்ல நிலையிலுள்ள காவசாகி மோட்டார் சைக்கிள் விற்பனைக்குண்டு. Dr. R. பாக்கியநாதன், 464, பீச்ரோட், யாழ்ப்பாணம் 1811

தொண்டமானாறு செல்வச் சந்நிதி கோவிலுக்கு கிழக்கு ரோட்டில் கந்தசாமி செல்லம் மாவிற்குரிய 2 பரப்புக்காணி விற்பனைக்குண்டு, தொடர்பு: க. துரைராஜா மே/பா ஆ. அருணசலம், சந்நிதிகோவில் தொண்டமானாறு. 1728

ஒருநாள், ஒருமாதம், இரண்டு மாத முட்டையிடும் Tetras பிறவுண் பேட்டுக் குஞ்சுகள் எப்போதும் பெற்றுக் கொள்ளலாம். விற்பனையின் பின் தேவையான ஆலோசனைகள், வைத்திய சேவைகளும் கொடுக்கப்படும். AICS கால்நடை வைத்திய நிலையம், 89, 2ம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம் 1822

நாவலர் வீதியில் ஆனைப் பந்தியடியில் 4 பரப்பு காணியும் வீடும் விற்பனைக்குண்டு. தொடர்பு: இல 89, 1ம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். 1826

8 ஸ்ரீ 7620 வொக்ஸ் வெகன் 1300 CC உடன் விற்பனைக்கு உண்டு. T.V. தம்பையா 44/7, மணல்தறை லேன், கந்தர் மடம். 1819

## காணவில்லை

16-9-84 இல் NV 300 K 2 KF 08440 நஷனல் டெக் தொலைந்து விட்டது. கண்டவர்கள் தயவு செய்து என். ராமச்சந்திரன் இல; 38, ''விஜேதா சலூன்'' நவீன சந்தை, யாழ்ப்பாணத்திற்கு அறிவிக்கவும். 1824

## தவறிவிட்டது

எனது அடையாள அட்டை (இ.இந்திரகுமார், நாதஸ்வரம் கே.கே.எஸ் ரோட், மல்லாகம்.) தவறிவிட்டது. கண்டவர்கள் தயவு செய்து மேற்படி விலாசத்தில் ஒப்படைக்கவும். 1829

## CLASSES

I. C. M. A. and Institute of Banking for May 1985 Exam. Classes October to March 1985. Past papers classes April to may 1985. Radhakrishna's 392, Navalar Road, Kailasapillayar Kovil. 1815

## FOR SALE

Brand new unpacked-Washing Machine National computermatic model NA 8800/NA and Kenwood 4 Burner Electric Cooker with Oven, Grill. Each 14,000/- or nearest offer. C. Arunakirinathan, Kaddapaly Lane, Anaicoddai. 1832

# அறிவித்தல்

வாசன் குறூப் தனியார் பஸ் சேவை ஒன்றினை TRANSLANKA என்னும் எமது ஸ்தாபனத்தின் பெயரில் கொழும்புவிற்கும் யாழ்ப்பாணத்திற்கும் இடையில் நடாத்துகின்றது.

மேற்படி சேவைக்கும் எமது ஸ்தாபனத்திற்கும் எவ்வித தொடர்பும் இல்லை என்பதனையும் இதனுல் ஏற்படும் அசௌகரியங்களுக்கு எமது ஸ்தாபனம் எவ்விதத்திலும் பொறுப்பல்ல என்பதனையும் பொதுமக்களுக்கு அறியத்தருகின்றோம்,

TRANSLANKA INVESTMENTS LTD.
TRANSLANKA MARKETING LTD.
No. 1, 1st Floor,
New Model Market,
JAFFNA. TEL : 23027

1838

# சுங்க அலுவலக அறிவித்தல்

இத்தால் சகல எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கும் அறியத்தருவதாவது 02-09-84 அன்று யாழ்ப்பாணம் சுங்க அலுவலகத்துக்குச் சொந்தமான இலக்கம் H 248364 தொடக்கம் H 248375 பெற்றோல் பெறும் கட்டளைப்புத்தகம் தவறிவிட்டது. எனவே இத்தொடர் இலக்கங்களைக்கொண்ட கட்டளைகளுக்கு எரிபொருள் விநியோகிக்க வேண்டாமென்றும், அப்படி விநியோகிக்கும் பட்சத்தில் அதன் கொடுப்பனவுக்கு இத்திணைக்களம் பொறுப்பேற்றுக்கொள்ள மாட்டாதென்பதை அறியத்தருகின்றேன். இக்கட்டளைபற்றிய தகவல் ஏதும் கிடைக்கப்பெற்ருல் யாழ். சுங்க அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளும்படி தயவாக வேண்டுகிறேன். தொலைபேசி இலக்கங்கள்: 22103, 22173, 24108.

(செ. கணேஷ்)
மேலதிக இறங்குதுறை அளவையாளர்
சுங்க சேகரிப்பாளருக்காக.

சுங்க அலுவலகம்,
யாழ்ப்பாணம். 1984-09-18. (1821)

## சாவகச்சேரி மாவட்ட நீதிமன்றம்

யாழ்ப்பாணம் டேவிட் ரோட் இல: 13 ல் வசித்த டாக்டர் எச்.எஸ்.இராசையா கைம்பெண் எமிலி இராசம்மா இராசையாவின் மரணசாதனத்துக்குடைய சொத்துக்கள் கடன் பொருட்கள் ஆகிய பற்றிய விடயமாக,

(மரணமெய்தியவர்)

பிரெடறிக் இரத்தின துரை இராசையா இல133 டேவிட் ரோட், யாழ்ப்பாணம்.

விண்ணப்பக்காரன்

இல 221/ரீ
சொத்துறுதிகள்

—எதிராக—

1. ரெஜினேல்ட் இராசதுரை இராசையா இல: 13 டேவிட ரோட் யாழ்ப்பாணம். தற்போது இல 103 பிலோயின்ஸ் ரோவ், புரொம்லி, கென்ற்- யூ.கே
2. வின்சென்ற் நேசதுரை இராசையா இல 13 டேவிட் ரோட், யாழ்ப்பாணம். தற்போது இல162மெல்போட்ரோட் சட்பெரி சட்போக் (யூ.கே இருவரும் அவர்களின் சட்டப் பிரதிநிதியாக நியமிக்கப்பட்ட தத்துவக்காரன்)
3. ஜேம்ஸ் இலங்ககோன் இராசரத்தினம், ஜே.பீ யு.எம் சட்டத்தரணி, கண்டி வீதி, யாழ்ப்பாணம் மூலமாக.

எதிர்வாதிகள்

### குடியியல் சட்டம் 524-532 பிரிவின் முறைப்படியும் 84 (பீ) படிவத்தின் படியும் முற்றுன கட்டளை அறிவித்தல்

மேற்பட்ட வழக்கில் மேற்கூறிய மரணமெய்தியவரின் மரணசாதனம் நிறைவேற்றும் பொருட்டு மேற்படி வழக்கில் வழக்கு தாக்கல் செய்துள்ளதெனவும் அது விடயமாக முற்தோற்ற அளவில் முற்றுன கட்டளை 1984ம் ஆண்டு வைகாசி மாதம் 24ந் திகதி பதியப்பட்டதெனவும் இத்தால் அறிவித்தல் கொடுக்கப்படுகின்றது.

1984 ம் ஆண்டு புரட்டாதி 18ந் திகதி.

கோட்டுக் கட்டளைப்படி
ஆ. குணநாயகம்
(ஒப்பம்)
பதிவாளர்

தயாரிப்பவர்
எஸ்.கந்தசாமி
(ஒப்பம்)
விண்ணப்பக்காரனின்
சட்டத்தரணி 1830

# நல்லூர் ப. நோ. கூ.சங்க ஊழியருக்கு சம்பள உயர்வு

[கல்வியங்காடு]

நல்லூர் பலநோக்குக் கூட்டுறவுச் சங்க ஊழியர்களுக்கு நிறுத்தி வைக்கப்பட்டிருந்த சம்பள உயர்ச்சியும். வாழ்க்கைப் படியும் வழங்கப்படும்.

நல்லூர் ப. நோ. கூ. சங்க ஊழியர்கள் 1983-ம் ஆண்டு ஏப்ரல்மாதத்திலிருந்து நிறுத்தி வைக்கப்பட்டிருந்த வாழ்க்கைப்படி ரூபா எண்பதும், 83-ம் ஆண்டு அக்டோபர் மாதத்திலிருந்து கொடுக்கப்படாமல் இருந்த வாழ்க்கைப்படி ரூபா 100-ம் நிலுவையுடன் அக்டோபர் மாதத்திலிருந்து வழங்கப்படும்.

இத்துடன் 1981-ம் ஆண்டு அக்டோபர் மாதத்திலிருந்து நிறுத்தம் செய்யப்பட்டிருந்த சம்பள உயர்ச்சியும் வழங்கப்

[7-ம் பக்கம் பார்க்க]

# எதற்கும் அரசை எதிர்பார்க்கும் நிலை மாறவேண்டும்

[கிளிநொச்சி]

''சுயமுயற்சி மூலம் மக்கள் தமது பகுதிகளை அபிவிருத்தி செய்யமுன்வரவேண்டும் எதற்கும் அரசை எதிர்பார்க்கும் நிலை மாறவேண்டும், சமுதாயத்தில் ஏற்றத்தாழ்வுகள் ஒழிக்கப்படவேண்டும். இதற்காகக் கிராம முன்னேற்றச் சங்கங்கள் பாடுபடவேண்டும்.''

இவ்வாறு முருகண்டி பொன்னகரில் இடம்பெற்ற கிராம முன்னேற்றச் சங்கப் புனரமைப்புக் கூட்டத்தில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றுகையில் கிளிநொச்சிப் பகுதி கிராம சேவை அலுவலர் திரு. எஸ். தனபாலசிங்கம் குறிப்பிட்டார்.

[7-ம் பக்கம் பார்க்க]

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றம்

காலஞ்சென்ற, கிரிலப்பனை பிற்காலம் வல்வெட்டித்துறை, வல்வெட்டி தோமஸ் அந்தோனி என்பவரது மரணசாதனமில்லாச் சொத்து விடயத்தில்

— மரணமெய்தியவர்

சிங்காரம் கனகராசா,
வன்னிச்சி கோவிலடி,
வல்வெட்டி.

— மனுதார்

மரணசாதன நியாயாதிக்க வழ. இல: 1207

மேலேயுள்ள இலக்கம் கொண்ட மரணச் சொத்து வழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்து போனவரின் மரணச் சொத்தை நிர்வகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளது என இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1984-ம் ஆண்டு புரட்டாதி மாதம்21ம்திகதி முற்பகல் 9-30 மணிக்கு இந் நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக் கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகாது என்பதற்கு காரணம் காட்டுமாறு இத்தால்தேவைப் படுத்தப்படுகின்ருர்.

1984-ம் ஆண்டு ஆடி மாதம் 10 ம் திகதி.

நீதிமன்றக் கட்டளைப்படி
றிச்சேட் ஜெயராசசிங்கம்,
பதிவாளர்.

வரைவு
ஒப்பம்:
மு. க. முத்துக்குமார்
மனுதாரின்
சட்டத்தரணி. 1805

## மூன்ருவது ஆண்டு விழா

[ஊரெழு]


ஊரெழு கிழக்கு தாரகை இளைஞர் சேவைகள் மன்றத்தின் மூன்ருவது ஆண்டுநிறைவு விழா கடந்த வாரம் நடைபெற்றது. மன்றத்தலைவர் திரு தி.உதயசூரியன் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் ஊரெழு கிராமசேவை அலுவலர் திரு அ.க.த.கிருஷ்ணராசா பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினுர்.

மன்றச்செயலாளர் திரு ப. குணேந்திரன் ஆண்டறிக்கையைச் சமர்ப்பித்து மன்றத்தின் கடந்தகாலப் பணிகளையும் எதிர்காலத்தில் நடைமுறைப் படுத்தப்படவிருக்கும் அதன் செயற்திட்டங்களைப் பற்றியும் எடுத்துக் கூறினுர்.

திரு சி.கணேசன் திரு ஆ. கணேஷ் ஆகியோரும்விழாவில் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினுர்கள்.

# 41-வதுநாள் நினைவஞ்சலி

அமரர் கந்தையா யோகேஸ்வரன்



ஆண்டவன் படைப்பு :
9-8-1949

ஆள்பவன் அழிப்பு :
11-8-1984

ஆருத் துயரில் எம்மை ஆழ்த்தி மீளாத் துயில் கொண்ட பாசப்பிணைப்பே! உமது பிரிவால் உளம் உருகும் அன்பு மனைவி இராசாத்தி, மனம் கலங்கி ஏங்கும் அன்புப் பிள்ளைகள், உமது பிரிவால் வாடும் உற்ருர், உறவினர் உமது ஆத்ம சாந்திக்காக எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்ருேம்.

இங்ஙனம்
அன்பு மனைவி, அருமைப் பிள்ளைகள்.
14, சென்மேரிஸ் 2-ம் வீதி,
கொழும்புத்துறை, யாழ்ப்பாணம். 1818

## சங்கானை பல நோக்குக் கூட்டுறவுச்சங்கம் (வ.உ)

# வெற்றுச் சாக்கு கேள்வி விண்ணப்பம்

சங்கானை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் தரம் பிரிக்கப்பட்ட 7239 வெற்றுச் சாக்குகள் கேள்விப்பத்திர மூலம் விற்பனைக்குண்டு. வைப்புப் பணமாக ரூபா 250/- செலுத்தி விண்ணப்பப்படிவம் சங்கத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

விண்ணப்பங்கள் பதிவுத் தபால் மூலம் இடது பக்க மூலையில் ''வெற்றுச் சாக்கு கேள்வி'' என எழுதப்பட்டு பொது முகாமையாளர் சங்கானை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம், சங்கானை என்ற விலாசத்துக்கு அனுப்பப்படல் வேண்டும்.

விண்ணப்ப முடிவு திகதி 28-9-84.

பொது முகாமையாளர்,
சங்கானை ப. நோ. கூ. சங்கம்.
17-9-84
சங்கானை 1831

# ஈக்குவடோரில் விமான விபத்து:

# பாதசாரிகள் உட்பட 40 பேர் பலி!

## பலர் காயமடைந்தனர்

**ஹிட்டோ, செப். 19**

**தென் அமெரிக்க நாடான ஈக்குவடோரில் சரக்கு ஜெட் விமான மொன்று வீழ்ந்து நொருங்கியதில் வீதியில் நின்றவர்கள் உட்பட 40 பேர் பலியானதாக அறிவிக்கப்பட்டது.**

இந்த விமானம் தலைநகர் ஹிட்டோ நோக்கிச் சென்று கொண்டிருக்கையிலேயே விபத்துக்குள்ளானது.

விமானத்தில் ஏற்பட்ட இயந்திரக் கோளாறு காரணமாக விமானம் தனது ஓடு பாதையிலிருந்து விலகி சன நடமாட்டம் மிகுந்த பகுதியிலும், மாதா கோவில் ஒன்றின் மீதும் வீழ்ந்து நொருங்கியது.

இதனுல் வீதியில் சென்று கொண்டிருந்தவர்கள் 30 பேர் விமானம் வீழ்ந்ததினுல் அதனுள் அகப்பட்டும் அதன் சிதைவுகளினுல் தாக்கப்பட்டும் பலியாகினர்.

ஏனைய பத்துப் பேரும் விமானத்திலிருந்த விமான சிப்பந்திகளாவர். விமான சிப்பந்திகளில் எவரும் உயிர் தப்பவில்லை.

இந்த விமான விபத்தில் பலர் காயமடைந்ததாகவும் கூறப்படுகிறது [சூ]

## வேலூர் சிறைச்சாலை விவகாரம்:

# விசாரணைக்கு உத்தரவு

சென்னை, செப். 19

வேலூர் மத்திய சிறைச்சாலையில் கைதிகள் சிறை ஊழியர்களினுல் தாக்கப்பட்டார்கள் என்பது குறித்து விசாரணை நடத்துமாறு இந்திய சுப்ரீம் கோர்ட் வட ஆற்காடு மாவட்ட நீதிபதிக்கு உத்தரவு பிறப்பித்துள்ளது.

கடந்த ஜூலை மாதம் 27ம் திகதி வேலூர் மத்திய சிறைச்சாலையில் சிறை ஊழியர்களினுல் பல கைதிகள் தாக்கப்பட்டதாகவும், கைதிகளில 70 பேர் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டு சிகிச்சையளிக்கப்பட்டதாகவும் கூறப்படும் 'ரிட் மனு' ஒன்றை சுப்ரீம் கோர்ட் ஏற்றுக்கொண்டு இந்தத் தீர்ப்பை வழங்கியுள்ளது

சம்பவம் நடைபெற்றஇடத்துக்கு உடனடியாகச் சென்று விசாரணை நடத்துமாறும், துரிதகதியில் விசாரணை நடத்தி அக்டோபர் மாதம் 8ம் திகதிக்கு முன்னர் அறிக்கையைத் தமக்குச் சமர்ப்பிக்குமாறும் சுப்ரீம் கோர்ட் உத்தரவிட்டுள்ளது. (சூ)

## இளம் தலைமுறையின் சுபீட்ச வாழ்வு

(கொழும்புத்துறை)

''எமது இளைஞர்களுக்கும், யுவதிகளுக்கும் கல்வியுடன் தொழிற் துறைப் பயிற்சிகளும் இன்றியமையாதது. இளம் தலைமுறையினரின் சுபீட்ச வாழ்வை நோக்கமாக கொண்டே தேசிய இளைஞர் சேவை மன்றம் தொழிற்பயிற்சிகளில் இளைஞர்களையும், யுவதிகளையும் ஈடுபடுத்துவதில் அதிக கவனம் செலுத்தி வருகின்றது.''

இவ்வாறு தேசிய இளைஞர் சேவை மன்ற வட பிரதேச உதவி இயக்குனர் திரு அ. நாகேந்திரன் தேசிய இளைஞர் சேவை மன்ற நடமாடும் மகளிர் பயிற்சிநிலையப் பொருட்காட்சியைத் திறந்து வைத்துப்பேசுகையில் குறிப்பிட்டார்

தெல்லிப்பளையில் இந்நடமாடும் மகளிர் பயிற்சி நிலையப் பொருட்காட்சி இளைஞர் சேவை அதிகாரி திரு க. முருகையா தலைமையில் நடைபெற்றது.

# 'அங்டாட்' செயற்பாடு குறித்து சோவியத்யூனியன் பாராட்டு

ஜெனிவா செப். 19,

ஐக்கிய நாடுகளின் வர்த்தகம்; அபிவிருத்திக்கான மகாநாடு (அங்டாட்) ஸ்தாபனத்தின் செயற்பாடு குறித்து சோவியத்யூனியன் பாரட்டுத் தெரிவித்துள்ளது.

1964ம் ஆண்டு ஜெனிவாவில் ஆரம்பமான இந்த ஸ்தாபனத்தின் 20 வது நிறைவையொட்டி சோவியத்யூனியன் வெளியிட்ட அறிக்கையிலேயே இந்தப்பாராட்டு தெரிவிக்கப்பட்டுள்ளது.

''கடந்த இருபது ஆண்டுகளில் இந்தஸ்தாபனம் தற்போதய பொருளாதார அமைப்பிலிருக்கும் குறைபாடுகளை நீக்குவதற்கும், 3ம் உலகநாடுகளின் பொருளாதார நிலையை அபிவிருத்தியடையச் செய்வதற்காக புதிய பொருளாதார அமைப்பொன்றை ஏற்படுத்துவதற்கும் இயன்றளவு முயற்சி செய்து வந்துள்ளது குறிப்பாக வளர்ந்த- வளரும் நாடுகளிடையேயான பேச்சுவார்த்தைகளை இந்தஸ்தாபனம் நடத்தியுள்ளது'' என்றும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதேவேளை 'அங்டாட்' ஸ்தாபனத்தின்செயற்பாடுகள் குறித்து அமெரிக்கா மற்றும் வளர்த்த நாடுகள்பல கண்டனம் தெரிவித்துள்ளன. இந்த ஸ்தாபனம் ஓர் அரசியல் கலப்பானது என்று அவை குற்றம் சாட்டியுள்ளன.

(சூ-வெ)

## ஓய்வூதியம் பெறுவோருக்கு பிரயாணவசதி செய்து கொடுக்குமாறு கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ். விளையாட்டரங்கில் ஓய்வூதியம் பெறும் பெரியவர்களுக்கு நேரகாலங்களை வீணுக்காமல் ஓய்வூதியம் பெற்று தங்கள் இடங்களுக்குச் சென்று வரக்கூடியதாக பிரயாண வசதிகளைச் செய்து கொடுக்குமாறு சர்வதேச லயன் கழகங்களின் வடமாநில பிரதி மாவட்ட ஆளுநர் லயன் சட்டத்தரணி எஸ். அம்பிகைபாலன் சகல லயன்ஸ் கழகப். பிரமுகர்களுக்கும் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இதன் முதல் எடுத்துக்காட்டாக, இம்மாதம் 20-ம் 26-ம் திகதிகளில் ஓய்வூதியம் பெறும் சாவகச்சேரிப் பகுதியைச் சேர்ந்தவர்களுக்குப் பிரயாணவசதி செய்து கொடுப்பதற்கு சாவகச்சேரி லயன்ஸ் கழகம் முன்வந்துள்ளதாகவும் லயன்ஸ் கழகத் தலைவர் லயன் கே. சிவஞானசுந்தரமும், லயன் பொ தெய்வேந்திரனும் இதற்குரிய நடவடிக்கைகளை எடுத்து வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்

ஓய்வூதியம் பெறும் சாவகச்சேரியைச் சேர்ந்தவர்கள் மேற்குறிப்பிட்ட இருதினங்களிலும் சாவகச்சேரி தபால் நிலையத்தில் காலை 8-30-க்கு சமுகமளிக்குமாறும் கேட்கப்பட்டுள்ளனர் (மா)

## கடத்தப் பட்டவர் மீண்டும் வந்தார்

[யாழ்ப்பாணம்]

யாழ். அரசினர் ஆஸ்பத்திரி 6ம் வாட்டிலிருந்து நேற்று முன்தினம்காலை கடத்திச்செல்லப்பட்டதாக கூறப்படும் நோயாளி ஒருவர் நேற்றுமுன்தினம் மீண்டும் வாட்டிற்கு திரும்பியுள்ளார்.

குணசீலன் என்ற இந்த நோயாளி அந்த வாட்டில் தங்கியிருந்தபோது இளைஞர் ஒருவர் அவரை கூட்டிச்சென்று வான்ஒன்றில் கடத்திச்சென்றதாக கூறப்படுகிறது.

### சர்வதேச கிரிக்கெட்:

## இந்திய கோஷ்டியில் இடம்பெறும் வீரர்கள்

புதுடில்லி, செப். 19

அவுஸ்திரேலியா, பாகிஸ்தான் ஆகிய இரு அணிகளுக்கும் எதிராக நடைபெறவிருக்கும் ஒருநாள் சர்வதேச கிரிக்கெட்போட்டியில் பங்குபற்றும் இந்தியகிரிகெட்குழுவுக்குசுனில் சாவஸ்கர் காப்டனுக நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்தக் குழுவில் அங்கம் வகிக்கும் 16 ஆட்டக்காரரர் விபரம் வருமாறு:

சுனில் கவாஸ்கர் (காப்டன்) நிகாந் கபில்தேவ், சுரேந்திர கண்ணு, சயட் கீர்மாணி, டிலிப் வென்சாகர், சந்திரா பாட்டேல், குலாம் யாக்கர், சேத்தன் சர்மா, ரோயர்பினி, மதன்லால், பல்விற்தர் கிங் சந்து, ரவிசாஸ்திரி, அஞ்சுமாள் கைக்குவாட், மோகிந்தர் அமரநாத், யகிந்தர் சிங், சிவிலால் யாதவ். (சூ)

# அகதிகளுக்கு காணி, வீடு!

## புனர்வாழ்வு நிதியம் எடுக்கும் நடவடிக்கை

(கொழும்புத்துறை)

கடந்த வருடம் ஜூலை மாத கலவரங்கள்ன்போது அகதிகளாகி வேறிடங்களில் தஞ்சமடைந்துள்ளவர்களுக்கு குடியிருப்பதற்குக் காணியும், வீடுகளும் வழங்க யாழ். அகதிகள் புனர்வாழ்வு நிதியம் முடிவு செய்துள்ளது.

கலவரங்களின்போது அகதிகளானோர் தற்போது யாழ். மாவட்டம், கிளிநொச்சி மாவட்டம் ஆகியவற்றில் தற்காலிகமாகத் தஞ்சமடைந்துள்ளனர். இந்த அகதிகளுக்குப் புனர்வாழ்வு அளிப்பதற்கு யாழ் அகதிகள் புனர்வாழ்வு நிதியம் ஐந்து அம்சங்களைக் கொண்ட செயற்திட்டமொன்றை நடைமுறைப் படுத்தவுள்ளது.

இத்திட்டத்தின்கீழ் தெரிவு செய்யப்படும் அகதிகளுக்குப் பளையில்குடியிருப்பதற்கு அரை ஏக்கர் நிலமும், 15.000 ரூபா பெறுமதியான வீடும் வழங்கப்படுமென்றும், க்குடியிருப்புக் காணி, வீடுகளைப் பெறுவோர் தாமே சுயமாகத் தொழில் வாய்ப்பைத் தேடிக்கொள்ள வேண்டுமென்றும், தற்போது தாம் தங்கியுள்ள இடங்களில் கோழிப்பண்ணை, கால்நடை வளர்ப்பு ஆகியவற்றில் ஈடுபட விரும்பும் அகதிகளுக்கு ஐயாயிரம் ரூபாவரை நிதியுதவி வழங்கி ஊக்குவிக்கப்படுமென்றும் தெரிவிக்க பட்டது.

வெல்டிங் தொழிற்துறையிலும் அகதிகளுக்குப் பயிற்சியளிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இதற்கென யாழ்ப்பாணத்திலும், கிளிநொச்சியிலும் இரு வெல்டிங் தொழிற்சாலைகள் நிறுவப்படவுள்ளன. இத்தொழிற்சாலைகளில் இலவசமாக ஆறுமாதகால பயிற்சியளிக்கப்படும். அகதிகளாக வந்துள்ள பெண்கள் தையல் தொழிற்துறையில் ஈடுபடுத்தப்படுவார்கள்.

இப்பெண்மணிகளுக்குத் தையல்தொழிலில் பயிற்சியளிக்கும் முகமாக கிளிநொச்சியில் தையற் தொழிற் பயிற்சி நிலையம் ஒன்று நிறுவப்படவுள்ளது. இத்தையற் தொழிற் பயிற்சி நிலையம் முப்பது தையல் இயந்திரங்களைக் கொண்டிருக்குமென்றும், பயிற்சி முடிந்தபின்னர் தையல் இயந்திரங்கள் கடனுதவியாக வழங்கப்படுமென்றும் அகதிகள் புனர்வாழ்வு நிதியம் அறிவித்துள்ளது இவ்உதவித்திட்டங்களுக்கு அகதிகள் பெருமளவில் விண்ணப்பித்துள்ளனர்.

# ஆந்திரா சட்டசபை இன்று கூடுகிறது

(ஹைதராபாத்)

ஆந்திரப் பிரதேச சட்டசபை இன்று கூடுகிறது. இன்றய கூட்டத்தொடரில் புதிய சபாநாயகர் தெரிவு செய்யப்படுவதும், முதலமைச்சர் திரு. என். டி. ராமராவ் தமது பெரும்பான்மை பலத்தை நிரூபிப்பதுவும் முக்கிய நிகழ்ச்சிகளாக இடம் பெறவுள்ளன.

அதேவேளை ஆந்திரா சட்டசபையின் தற்காலிக சபாநாயகராக திரு. மகேந்திரநாத் கவர்னரினுல் நியமிக்கப்பட்டுள்ளார். ராமராவ் புதிய அமைச்சரவையில் இடம் பெற்றிருந்த இவர் தமது அமைச்சர் பதவியை ராஜினுமாச்செய்து தற்போது தற்காலிக சபாநாயகராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இன்று நடைபெறும் புதிய சபாநாயகர் தெரிவில் தமது குழுவைச்சேர்ந்த ஒருவர் போட்டியிடுவார் என்று முன்னுள் முதலமைச்சர் திரு பாஸ்கரராவ் தெரிவித்துள்ளார் இதற்காக இவர் இந்திராகாங்கிரஸின் உதவியையும் நாடியுள்ளார்.

(சூ-வெ)

# வேலணை பகுதியில் நடக்கும் கொள்ளைகள்

(வேலணை)

வேலணை பலநோக்குக் கூட்டுறவுச்சங்கத்தின் புடவைக் கடையில் கடந்த சனியன்று ரூ 1,075 25 சதம் கொள்ளையடிக்கப்பட்டது

எரி பொருள் விற்பனை நிலையமொன்றிலும் இதேகோஷ்டியினர் 300 ரூபாவைக் கொள்ளையடித்துள்ளதுடன் அங்கு மண்ணெண்ணெய் வாங்கவந்திருந்த சிறுவனிடமிருந்த 300 ரூபாவையும் கொள்ளையடித்துச் சென்றுள்ளதாகக் கூறப்படுகிறன்றது.

புதுபச்சைக் கார் ஒன்றில் வந்தநான்கு இளைஞர்கள் இக்கொள்ளையை நடத்தியதாசப் புகார் செய்யப்பட்டுள்ளது.

இப்பகுதியில் கடைகள் எல்லாம் நேரத்தோடு பூட்டப்படுவதால் இரவு நேரத்திலும் கொள்ளைகள் அதிகரித்துள்ள சில தினங்களுக்குமுன் 3 கடைகளில் கொள்ளையடிக்கப்பட்டுள்ளது.

### மணிவாக்கு

இருப்பவனல்ல இறைவன் என்னுடன். ஏற்கனவே நான் இதையே சொன்னேன் மேதினி தன்னில் வேதனை உண்டு சோதனை நாளில் துணிவுடன் இருங்கள்.

— இயேசுகாவியம்.

# நமது நோக்கு

## நல்ல முடிவு

வருடமுடிவில் நடைபெறவிருக்கும் பொதுப் பரீட்சைகளை உத்தேசித்து பகிஷ்கரிப்புகள், ஆர்ப்பாட்டங்கள் போன்றவற்றில் ஈடுபடாமல் முழுக்கவும் கல்வியில் தம் கவனத்தைச் செலுத்துவதென யாழ்ப்பாண மாணவர் பிரதிநிதிகளின் குழு எடுத்துள்ள முடிவு பாராட்டி வரவேற்க வேண்டிய ஒன்று.

மாணவர் சமுதாயம் மாத்திரமின்றி, கல்வியில் சம்பந்தப்பட்டுள்ள சகல துறையினரும் குறிப்பாக - தம் பிள்ளைகளின் கல்வியில் அக்கறைகொண்டுள்ள சகல பெற்றோர்களுமே மகிழ்ச்சியும் வரவேற்பும் தெரிவிக்கும் விடயமிது.

அரசு தமிழ் மாணவரின் கல்வியில் என்று பாரபட்சமான முறையில் கைவைக்க முனைந்ததோ அன்றிலிருந்தே தமிழ்ப்பகுதிகளின் கல்வித்துறையில் சீர்குலைவு எழத் தொடங்கியது. மாணவ இளம் சமுதாயத்தின் மத்தியில் விரக்தி நிலை கொள்ளத் தொடங்கியது. பெற்றோரின் மனங்களில் அதிருப்தியும், ஆற்ருமையும் முளைவிடத் தொடங்கின.

அதன் விளைவினை இன்று பார்க்கின்ரோம்!

1970-ம் ஆண்டளவில், உயர் கல்வியில் தமிழ் மாணவர்களுக்குப் பாதகமான முறையில் தரப்படுத்தல் கொண்டு வரப்பட்டதையடுத்து வடக்கிலும் கிழக்கிலும் மாணவர் சமுதாயம் கிளர்ந்தெழுந்தது. ஊர்வலங்களும், பொதுக் கூட்டங்களும், ஆர்ப்பாட்டங்களும் பல மாதங்களாக நீடித்தன.

அரசு செவிசாய்க்கவில்லை.

சுமார் 15 ஆண்டுகளின் முன்னர் இவ்வாறு கொந்தளிப்புக்குள்ளான மாணவர் சமூகத்தில் பல்வேறு வகையில் திறமையும், தகுதியும் பெற்றிருந்த அநேகர் வெளிநாடுகளில் உயர் பதவிகளிலும், அகதி முகாம்களிலும் இருந்துவருகின்றவர்களைத்தவிர இன்னும் ஏராளமானவர்கள் தீவிரவாத இயக்கங்களிலும் ஈடுபட்டுவிட்டார்களென்று கருதப்படுகின்றது.

உள்ளூரில் வேலைபெற்றிருப்பவர்களை விரல் விட்டு எண்ணிவிடலாம்.

தொடர்ந்துவந்த காலங்களிலும் இங்கு கல்வி நிலை சீரடைந்துவிட்டதாகக் கூற முடியாது.

வேலை நிறுத்தங்கள், கதவடைப்புகள், பகிஷ்கரிப்புகள், சத்தியாக்கிரகங்கள், ஊரடங்கு உத்தரவுகள் என்று காலத்துக்குக் காலம் உருவாகும் அரசியல்போக்குகளினுலும், அரசின் கெடுபிடிகளினுலும் பிள்ளைகளின் படிப்புப் பாழடிக்கப்பட்டு வருகின்றது.

இன்னும் இவ்வாருன பல்வேறு காரணங்களால் ''படிப்புத்தான் என்னத்துக்கு'' என்ற மனப்பான்மையும் வளரப்பார்க்கின்றது.

எந்த நிலையிலும், தம் பிள்ளைகள் தொழில் ஏதும் செய்யாவிடினும் கூட வாழ்க்கைக்குத் தேவையான கல்வியை ஓரளவிலாகுதல் பெற்றிருக்க வேண்டும் என பெற்ருேர் விரும்புவது இயற்கை அந்த அளவிலாகுதல் விரக்தியின் உச்சத்தில் உலாவுகின்ற போதிலும் மாணவர்கள் தம் கல்வியைப் புறக்கணிக்காது தேர்ச்சி பெறுவது அவசியம்.

தமிழர் சமுதாயத்தைப் பற்றிய பெருமைக்குரிய கருத்துக்கள் வெளிநாடுகளில் இன்று நிலைகொண்டிருப்பதற்கு பெரும்பாலும் கல்வியின் மூலம் அவர்கள் நிலைநாட்டிய சாதனைகளே காரணம் என்று எடுத்துரைக்கத் தேவையில்லை.

எனவே, கல்வியை அவசியமும், தவிர்க்க முடியாததுமான சந்தர்ப்பங்களை விடுத்து ஏனைய காலங்களில் புறக்கணிக்காமல் மாணவர்கள் வளர்த்துக் கொள்வதும், அதற்கான வாய்ப்புக்களை கூடியவரை பயன்படுத்திக் கொள்வதும் இன்றைய எமது நிலைக்கும் எதிர்காலத்துக்கும் அவசியமாகும்.

அந்தவகையில் மாணவர் பிரதிநிதிகளின் அறிவிப்பும் வேண்டும்காலும் உரிய முறையில் மதிக்கப்படும் என்று நம்புவோம்.

## தயரத்தின சம்பள அறிக்கையைவெளியிடுங்கள்!

ஆசிரிய சம்பள விடயத்தை செவ்வனே பரிசீலனைசெய்து கணிசமான உயர்வை வழங்குவதே நோக்கமாகக் கொண்டு நியமனம் பெற்றதே தயரத்தின சம்பள கமிட்டி.

கல்விஅமைச்சர் இந்த நியமனத்தை வெளியிட்டபோது சம்பள அதிகரிப்பு கட்டாயமாக நடைபெறுமென்ற உறுதி மொழியை அளித்திருந்தார்.

இந்த அறிக்கை தை மாதம் 1034ல் கல்வி அமைச்சர் திரு. றனில் விக்கிரமசிங்காவுக்கு கையளிக்கப்பட்டது.

இந்த அறிக்கையில் சிலபகுதிகளை தை 1985ல் அமுல்படுத்துவதாக அமைச்சர் பத்திரிகைக்கு செய்தி விடுத்திருக்கிருர்.

இலங்கை ஆசிரியர் சங்கம் இந்த அறிக்கையில் ஒரு பிரதி எடுக்கமுடியாமற் போய்விட்டது

இதில் என்ன மர்மம் இருப்பதோ தெரியவில்லை.

கல்வி அமைச்சர் இந்த அறிக்கையை அச்சிட்டு வெளியிடவேண்டுமென்று வினயத்துடன் கேட்டுக்கொள்கின்ரேம்.

-எச். என். பர்ஞண்டோ
பொதுச்செயலாளர்,
இலங்கை ஆசிரியர் சங்கம்.

# மக்கள் கருத்து

## கிராமிய அபிவிருத்தித்திட்டத்திற்கு
# மேலும் 4 தமிழ்மாவட்டங்கள்!

(கொழும்புத்துறை)

ஒருங்கிணைந்த கிராமிய அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் மேலும் நான்கு தமிழ் மாவட்டங்கள் சேர்க்கப்பட்டுள்ளன.

கிளிநொச்சி, முல்லைத்தீவு, மட்டக்களப்பு, திருகோணமலை ஆகிய நான்கு மாவட்டங்களுமே ஒருங்கிணைக்கப்பட்ட கிராமிய அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் சேர்க்கப்பட்டுள்ள மாவட்டங்களாகும். இத்திட்டத்தின்கீழ் இம்மாவட்டங்களை அபிவிருத்தி செய்வதற்கான செயற்படு திட்ட ஆய்வு வேலைகள் யாவும் பூர்த்தியடைந்துள்ளன என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நான்கு மாவட்டங்களின் முதற்கட்ட அபிவிருத்தி வேலைகள் அடுத்த ஆண்டு ஆரம்பமாகும். இவ் அபிவிருத்தி வேலைகளுக்கென ஒவ்வொரு மாவட்டத்திற்கும் தலா ஆறு மில்லியன் ரூபா வீதம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

ஏற்கனவே வவனியா, மன்ஞர் மாவட்டங்கள் ஒன்றிணைக்கப்பட்ட கிராமிய அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகின்றன. காடு வளர்ப்பு, பாரிய நீர்ப்பாசன வசதிகள், சிறிய நீர்ப்பாசன வேலைகள், விவசாயம், நிலஅபிவிருத்தி, பண்ணைத்துறை, மீன்பிடித்துறை, கிராம மின் விஸ்தரிப்பு, புதிய வீதிகள் நிர்மாணம், கல்வி, சுகாதாரம் போன்ற அபிவிருத்தித் திட்டங்கள் ஒருங்கிணைக்கப்பட்ட கிராமிய அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் இம்மாவட்டங்களில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

## கரவெட்டி கன்னியர் மடம்
# வெள்ளிவிழா

கரவெட்டி புனித லூர்த்து அன்னை கார்மேல் கன்னியர் மடத்திற்கு வரும் 22-ம் திகதி 25-வது பிறந்த தினமாகும்!

இன்றைய சூழ்நிலையிலும் இக்கன்னியர் மடத்தின் கால் நூற்ருண்டு காலத்து அளப்பர்ய சேவைகளின் கனபரிமாணங்கள் இப்பகுதி மக்களை இறை நன்றி அமைதி விழாவாக இதனைக் கொண்டாட வைத்துள்ளன!

கரவெட்டி திரு இருதயக் கல்லூரியின் அதிபராகவும் கரவைப் பங்கின் பங்குத் தந்தையாகவும் இருந்த இன்றைய யாழ். ஆயர் அதி. வண. பி. தியோகுப்பிள்ளை ஆண்டகையின் சிந்தனைக் கருவூலமாகி, பின்னர் அதிபராக வந்த வண பிதா பி. ஈ. அல்பிறட் அடிகளாரின் முயற்சியால் உருவாகி, அன்றைய யாழ். ஆயர் அதி வண எமிலியானுஸ்பிள்ளை ஆண்டகையால், 1959 ஜனவரி 7-ம் திகதி திறந்துவைக்கப்பட்டது இக் கன்னியர் மடம்!

பாலர் வகுப்புகள், இசை, நடன தையல், ஆங்கில வகுப்புகள் நடாத்தி.அறிவுத்தாகம் தீர்ப்பதுடன், அநாதரவானேர்க்கு ஆதாவளித்தும் வருகிறது இது!

கரவெட்டி திரு இருதயக் கல்லூரியுடன் பின்னிப் பிணைந்துள்ள இந்த மடத்துக் கன்னியாஸ்திரிகளின் சேவையைச் தக்க விதத்தில் பயன்படுத்த இப்பகுதிப் பெரியோர்கள் முயற்சித்தனர். இப்பகுதி பெண் பிள்ளைகளின் நலன் கருதி, இக்கல்லூரியை மகளிர் கல்லூரியாக்கித் தங்கள் அகக் கண்ணுல் பார்த்து மகிழ்ந்தனர். இத்திட்டத்தின் முதற்கட்டமாக அன்றைய உடுப்பிட்டி எம். பி.யான தலைவர் 'சிவா'வின் முயற்சியால் இது கலவன் பாடசாலையாக்கப்பட்டது!

பின்னர் ஏற்பட்ட அரசியல் மாற்றங்களால் இப்பகுதி மக்கள் குறிப்பாக மாணவிகள் கொடுத்து வைக்கவில்லை!

இங்கு பணியாற்றிய அருட் சகோதரிகள், ஏடா, சபீனு, சிசிலியா மேரி, ஜெரோம், ஹென்ரிக்கா, மாறி லூயிஸ், லியோனு, போன்ரோர் என்றும் நினைவில் நிறைந்தவர்கள்!

கரவெட்டி, கரணவாய், நவிண்டில், நெல்லியடி, துன்னலைப் பகுதிகளைச் சேர்ந்த பல 'சிறுசு'களுக்கு அடிக்கல்வி புகுத்தி, ஒழுக்கநெறி மிக்க வைத்தியர்களையும், பொறியியலாளர்களையும், கல்விமான்களையும், இறைதேசபக்தர்களையும் உருவாக்கித்தந்த இந்தமடம் தொடர்ந்தும் வெற்றிநடை போட்டு இறையரசுபரப்பி, புது உலகம் சமைக்க இறையை இறைஞ்சுவோம்!!

-வரதன்

## "வடபகுதியில் அப்பாவி மக்கள் சித்திரவதை"
### இ. தொ காவின் வவனியா கமிட்டி கண்டனம்

(வவனியா)

வடபகுதியில் பொதுமக்கள் சுடப்படுவதையும் குற்றமற்ற அப்பாவிமக்கள் கைதுசெய்யப்பட்டு சித்திரவதை செய்யப்படுவதையும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் வவனியா மாவட்ட நிர்வாகக்கமிட்டி கண்டித்துள்ளது.

நிர்வாகக்கமிட்டிக் கூட்டம் தலைவர் திரு. ஆ. குருசாமி தலைமையில் அண்மையில் நடைபெற்றது. பல தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளன

''ஆயுதப் படையினரால் கைதுசெய்யப்படுவோர் பற்றிய விபரம் அரச அதிபருக்கு தெரிவிக்கப்படவேண்டும்.

''கூடியஅளவு கைதுசெய்த இடத்திலே விசாரணை செய்து முடிவு எடுப்பதுடன் அவர்களுடைய பெற்ரோர்களைப் பார்க்க அனுமதிவழங்கவேண்டும். வவனியாவின் ஒரு உதவி அதிபர் பிரிவை மதவாச்சிக்கு இணைக்காமல் வவனியா எப்போதும் இருந்ததுபோல் தனித்து இயங்க ஆவனசெய்யப்படவேண்டும். ஆகியதீர்மானங்கள் அவைகளில் சிலவாகும்.

## அடுத்த ஆண்டு பட்ஜட்:
### பாதுகாப்புத் துறைக்கு முன்னுரிமை

(கொழும்பு)

அடுத்த ஆண்டு 'பட்ஜட்'டில் நாட்டின் பாதுகாப்புத் துறைக்கே அதிக நிதி ஒதுக்கப்படவுள்ளது. இத்துறைக்கு மாத்திரம் 300கோடி ரூபாவை ஒதுக்குவதற்கு நிதியமைச்சர் திரு. ரொனி டி. மெல் முடிவு செய்துள்ளார்.

நவப்பர் மாதம் 14ம் திகதி பாராளுமன்றத்தில் பட்ஜட் சமர்ப்பிக்கப்படும்.

நாட்டில் பயங்கரவாத நடவடிக்கைகள் அதிகரித்து வருவதனைக் கருத்தில் கொண்டே பாதுகாப்புத்துறைக்கு என்றுமில்லாதவகையில் அதிக நிதி ஒதுக்கப்படவுள்ளது.

அடுத்த ஆண்டுக்கான பட்ஜட்டில் மொத்த செலவீனங்கள் 6000 கோடி ரூபாவாகவும் வருமானங்கள் 3000 கோடி ரூபாவாகவும் இருக்குமென்று ஆரம்ப மதிப்பீட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பட்ஜட் பற்ருக்குறையான 3000 கோடி ரூபாவும் புதிய வரிகள் மேலதிக வரிகள் வெளிநாட்டுக் கடன, உள்நாட்டுக் கடன்கள் மூலமாகவே பெருமளவுக்கு நிவர்த்தி செய்யப்படுமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

## மகஜர்

(கோப்பாய்)

''இலங்கை கல்விச்சேவை 3ம் 4ம் தர பதவி உயர்வுக்கு விண்ணப்பிப்பதற்கு ஆசிரியர் கலாசாலை இரண்டாம் தர விரிவுரையாளர்களிற்கும் சந்தர்ப்பம் வழங்க வேண்டும்,,என்று ஆசிரியர் கலாசாலை விரிவுரையாளர்கள் கல்வி அமைச்சிடம் மகஜர் மூலம் கேட்டுள்ளனர்.

## எளிமையான நவராத்திரி விழா

(சாவகச்சேரி)

அண்மைக் காலத்தில் வடபகுதியில் இடம் பெற்றவன் செயல்களையும், பாடசாலை மாணவர்கள் கைதாவது காரணமாகவும் இம்முறை சாவகச்சேரித் தொகுதியிலுள்ள பாடசாலைகளில் நவராத்திரி விழாவினை எளிமையாகக் கொண்டாடும் வண்ணம் சாவகச்சேரித் தொகுதி உயர் வகுப்பு மாணவர் மன்றம்,சகல மாணவர்களையும் கேட்டுக் கொள்கின்றது என மன்றத்தினர் தெரிவித்துள்ளனர்.

இவ் விழாச் செலவுகளுக்குத் திரட்டப்படக் கூடிய நிதியை மாணவர்களிடம் இருந்து திரட்டி, பருத்தித்துறையில் எரிக்கப்பட்ட பிரபல கல்லூரியையும், நூலகத்தினை கட்டியெழுப்ப உதவுவோம் எனவும் கூறியுள்ளனர்.

## சுமத்திராவில் ஒரு கோடி ரூபாவில்
# தமிழ் வித்தியாலயம்

[ஜகர்த்தா]

சுமாத்திராத் தீவிலுள்ள மீடான் என்னுமிடத்தில் வசிக்கும் திரு. எஸ். மாரிமுத்து என்ற தமிழர் அங்குள்ள தமிழ் குழந்தைகளின் கல்வி வளர்ச்சிக்காக ஒரு கோடி ரூபா செலவில் 4 மாடிகள் கொண்ட ஒரு வித்தியாலயத்தை அமைத்துக் கொண்டிருக்கிறார்.

இவ்வித்தியாலயம் மீடான் மாரியம்மன் பேரில் அமைக்கப்படுகின்ற போதும் இதற்கான நிதியை அவரே வழங்கியுள்ளார்.

## "மனிதாபிமான உரிமைக்காக ஓரணியில் போராடவேண்டும்!"

[புலோலி - கரவெட்டி]

"இன்றைய நிலையிலே ஆங்காங்குள்ள மக்கள் ஸ்தாபன ரீதியாகத் தங்களை ஓரணியில் திரட்டித் தங்கள் மனிதாபிமான உரிமைகளுக்காகப் போராடவேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. இந்த நோக்கத்துடனேயே வடபகுதியில் பிரஜைகள் குழுக்கள் நிறுவப்பட்டுவருகின்றன".

இவ்வாறு, கரவெட்டி உதவி அரச அதிபர் பிரிவுப் பிரஜைகள் குழு அங்குரார்ப்பணக்கூட்டத்திற்குத் தலைமை வகித்து உரையாற்றிய யாழ். பிரதேச கம்யூனிஸ்ட் கட்சிப் பொதுச் செயலாளர் திரு பொன். குமாரசாமி குறிப்பிட்டார்.

இக்கூட்டம் கட்டைவேலி நெல்லியடி ப. நோ. கூ. சங்க மண்டபத்தில் நடைபெற்றது.

தற்காலிக உத்தியோகத்தர் தெரிவில் பிரஜைகள் குழுத் தலைவராகச் சட்டத்தரணி எஸ். செல்லையாவும், உப தலைவராக திரு. எம். எஸ். சீனித்தம்பியும், இணைச் செயலாளர்களாக திரு. பொன். குமாரசாமி, சட்டத்தரணி வ மகாலிங்கம் ஆகியோரும், பொருளாளராகத் திரு. த. சிதம்பரப்பிள்ளையும் தெரிவுசெய்யப்பட்டனர். பத்துப் பேர் கொண்ட செயற்குழுவும் தெரிவுசெய்யப்பட்டது.

### போக்குவரத்து கஷ்டம்

(நெடுந்தீவு)

கிளிநொச்சி - உருத்திரபுரம் பாதை கடந்தவெள்ளப்பெருக்கினுல் பலஇடங்களில் பாதிப்பு அடைந்த நிலையிலுள்ளது. பத்தாயிரத்துக்கும் அதிகமானேர் குடியிருக்கும் உருத்திரபுரப் பகுதிக்குப் போக்குவரத்துச் செய்வது மிகவும் கஷ்டமாகவுள்ளது.

## சோவியத் வெளியுறவு அமைச்சர் நியூயோர்க் சென்றுர்

(நியூயோர்க்)

சோவியத் வெளியுறவு அமைச்சர் அந்ரி குரோமிக்கோ ஐ. நாடுகளின் 39 வது கூட்டத்தொடரில் கலந்து கொள்வதற்காக நேற்று நியூயோர்க் போய்ச் சேர்ந்தார்.

இவர் நாளை மறுதினம் அமெரிக்க ஜனதிபதி ரெனல்ட் றீகனை வெள்ளை மாளிகையில் சந்தித்து பேச்சுவார்த்தை நடததுவார். சோவியத் யூனியனுடன் உறவுகளை வலுப்படுத்த அமெரிக்கா விரும்புகிறது என்ற கருத்தை அமெரிக்கஜனதிபதி சோவியத் தலைவர்களுக்கு விளக்குவார் என எதிர்பார்க்கப்படுகிறது. (சூ)

## தீயில்கருகி மாண்ட ஊழியர் குடும்பத்துக்கு அன்பளிப்பு

(பண்டத்தரிப்பு)

கூட்டுறவு ஊழியர் தொழிற் சங்கம், கடந்த 1983 ஜூலை கலவரங்களின்போது கொழும்பிலிருந்து லொறியில் எரி பொருள் ஏற்றிக் கொண்டு வரும் வேளையில் லொறியுடன் சேர்த்துக் கொளுத்தப்பட்டு தீயில் கருகி அகாலமரணமடைந்த புலோலி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் மூன்றுஊழியர்களினதும் குடும்பங்களுக்கும் தலா 3955 ரூபா 9 சதத்தை அன்பளிப்புச் செய்துள்ளது. உயிரிழந்த குடும்பங்களின் சார்பில் துன்னலை தெற்கு கரவெட்டியை சேர்ந்த திருமதி மகேஸ்வரி வல்லிபுரம், காங்கேசன்துறையைச் சேர்ந்த திருமதி வசந்தா சாந்தி, புலோலி மேற்கு, பருத்தித்துறையைச் சேர்ந்த திரு ச.கந்தப்பு ஆகியோர் கடந்த ஞாயிற்றுக் கிழமையன்று யாழ். நகரிலுள்ள கூட்டுறவு ஊழியர்கள் தொழிற் சங்க காரியாலயத்தில் நடைபெற்ற வைபவத்தில் பிரசன்னமாக இருந்து தலா 3955 ரூபா 9 சதத்தையும் பெற்றுக்கொண்டனர். சங்கத்தலைவர் திரு இரா.லோகநாதன் இப்பணத்தைச் சம்பந்தப்பட்டவர்களிடம் கையளித்தார்.

## வட்டுக்கோட்டையில் தையல் பயிற்சி நெறி

(பண்டத்தரிப்பு)

யாழ் தொழில் திணைக்களத்தின் ஆதரவில் வட்டுக்கோட்டையில் தையற் பயிற்சி நெறியொன்று அண்மையில் ஆரம்பித்து வைக்கப்பட்டது. வட்டுக்கோட்டை நல்லொழுக்க வாலிபர் இயக்கத் தலைவர் திரு அ. அரியரத்தினம் தலைமையில் நடைபெற்ற இந்த ஆரம்ப வைபவத்தில் பிரதம அதிதியாக யாழ் தொழில் திணைக்கள உதவி ஆணையாளர் திரு என். சி. இராசநாயகம் கலந்து கொண்டார்.

இந்த தையல் பயிற்சி நிலையம் இப்பகுதி யுவதிகளுக்கு பெரும் வரப்பிரசாதமாக அமையும் என்றும், நல்லொழுக்கத்துடனும் கடமை உணர்வுடனும்மானவிகள்இப்பயிற்சியைப் பெற்று முன்னேற்றம் காணவேண்டும் என்றும். பயிற்சி முடிவில் அனைவருக்கும் சான்றிதழ்கள் வழங்கப்படும் என்றும் யாழ் தொழில் திணைக்கள உதவி ஆணையாளர் திரு என்.சி. இராசநாயகம் அங்கு உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.

வட்டு சிவன்கோவிலடி உப தபால் நிலைய அதிபர் திரு ஐ சௌந்தரராஜன் மங்கள விளக்கேற்றினர். வட்டுக்கோட்டை தொழில் திணைக்கள பரிசோதகர் திரு ச. சுப்பிரமணியம் வரவேற்புரை நிகழ்த்தினர்

### நிதியுதவி

[புலோலி]

பருத்தித்துறையில் அண்மையில் நடைபெற்ற வன்செயல்களின்போது மரணமான கார்ச்சாரதி சடாட்சரத்தின் குடும்பத்திற்கு உதவுமுகமாகப் பருத்தித்துறை ஸ்ரீ இராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமத் தலைவர் சுவாமி சித்ரூபானந்தா ரூபா 450/-ஐக் கையளித்தார்.

பருத்தித்துறையைச் சேர்ந்த திரு. மா. இரத்தினசோதி, திரு. எஸ் இராஜேந்திரன் ஆகியோர் சேவாச்சிரமத்திற்கு வழங்கிய நிதி உதவியைக் கொண்டே சுவாமி சித்ரூபானந்தா சடாட்சரத்தின் குடும்பத்திற்கு இந்நிதியுதவியை வழங்கினர்.

### யாருடையது

கொழும்பு பேஸ்லைன் வீதியைச் சேர்ந்த திரு. சிவசுப்பிரமணியம் இந்திராஜித், குருநகர் கடற்கரை வீதியைச் சேர்ந்த திரு. வின்சன்ட் சுதர்சிங் ஆகியோரின் அடையாள அட்டைகளை திரு. சந்திரனும், ஒரு மூக்குக்கண்ணுடியை திரு. எஸ். பெரியதம்பியும் கண்டு எடுத்து ஈழநாடு அலுவலகத்தில் ஒப்படைத்துள்ளார்கள் அலுவலகநேரத்தில் பெற்றுக் கொள்ளவும்.

### பயிற்சி வகுப்புகள்

(பண்டத்தரிப்பு)

ஆரம்ப சுகாதார கவனிப்பு திட்டத்தின்கீழ் தொண்டர்களுக்கான பயிற்சி வகுப்புகள் வரும் 2 -ம் 28-ம் திகதிகளில் பண்டத்தரிப்பு வாழ்வொளி நிலையத்தில் நடைபெறவுள்ளது. யாழ் சுகாதாரப் போதனுசிரியர் திரு. கா, வைத்தீஸ்வரன், மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் சிங் ராசா, பண்டத்தரிப்பு சுகாதார பரிசோதகர் திரு. கா. மாணிக்கவாசகர், பண்டத்தரிப்பு குடும்பநல சேவையாளர் திருமதி அழகம்மா முருகையா ஆகியோர் இதில் உரையாற்றுவார்கள்.

### சேவை நலம் பாராட்டு

(வண்ணுர்பண்ணை)

யாழ்ப்பாணம் குருநகர் மத்திய அரசினர் மருத்துவ மனையில் பல வருடங்கள் வைத்திய பொறுப்பதிகாரியாகவிருந்து பணியாற்றி இளைப்பாறியுள்ள டாக்டர்.கே சயலொலிபவனின் சேவையை பாராட்டிக் கௌரவிக்க இப் பகுதி மக்கள் ஏற்பாடு செய்துள்ளனர்.

### ஊரெழு சன சமூக நிலையம்

(ஊரெழு)

ஊரெழு கலை வாணி சன சமூக நிலையம் அண்மையில் திறந்துவைக்கப்பட்ட ஊரெழு கிராம அபிவிருத்திச் சங்க பணிமனையில் இயங்கத் தொடங்கியுள்ளது. மேற்படி சன சமூக நிலையத் தலைவர் திரு.க. வை. தனேஸ்வரன் தலைமையில் நடை பெற்ற அதன் நிர்வாக சபைக்கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கமைய இந்த முடிவு நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளது.

## கித்துலுத்து முக்கொலை வழக்கு:
# எதிரிகள் பிணையில் செல்ல அனுமதி

(திருகோணமலை)

கித்துலத்து முக்கொலை வழக்கில் ஆறு எதிரிகள் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

விசாரணையின் இடைநடுவில் எதிரிதரப்புச் சட்டத்தரணியின் விண்ணப்பத்தை ஏற்று திருகோணமலை நீதவான், எதிரிகளைப் பிணையில் விடுவித்தார்.

இவ்வழக்கில், 1983 ஜூன் வன்செயலின்பொழுது கே. திருநாவுக்கரசு, அவரது மனைவி சீதா, 3 வயதுப் புதல்வி உஷா ஆகிய மூவரையும் வெட்டிக் கொலைசெய்ததாகவும், பின்னர் வீட்டினுள் போட்டு எரித்தாகவும் எட்டுப் பேர் மீது உப்புவெளிப் பொலிசார் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

எட்டு எதிரிகளில் டி பி. உபசேன, பி பி. அலோசியஸ் ஏ. கே ஹீன்பண்டா ஆர். ஜி. குணரத்ன, பி. பி சுகததாஸ, களுவாரத்ன ஆகிய 6 எதிரிகள் மட்டுமே நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டனர்.

பி. பி. குணசேகரா, ஏ திஸநாயக ஆகிய இரண்டு எதிரிகளும் தலைமறைவாக இருப்பதால் அவர்கள் மீது வாரண்ட் பிறப்பிக்கப்பட்டுள்ளது.

விசாரணையின் பொழுது வெளிவந்த தகவல்கள் வருமாறு:

எரிந்த மூன்று சடலங்களும் எரிந்தநிலையில் இருந்த வீட்டினுள் கண்டுபிடிக்கப்பட்டன. அச்சமயத்தில் அந்த இடத்தில் குழுமியிருந்த கூட்டத்தில் எதிரிகளும் காணப்பட்டனர். பிணைமனுவை ஏற்ற நீதவான், ஒவ்வொரு எதிரியையும் தலா 750 ரூபா காசுப் பிணையிலும் 1000 ரூபா ஆட் பிணையிலும் விடுவித்தார் மேல் விசாரணை ஒத்திவைக்கப்பட்டது.

### அம்புலன்ஸ்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கிடந்த சாவியை எடுத்துச் சென்று அம்புலன்ஸைக் கடத்திச் சென்றதாகவும் கூறப்படுகிறது.

யாழ். ஆஸ்பத்திரியில் ஒரேஒரு அம்புலன்ஸ்வண்டி மட்டும் இருப்பதாகவும் இக் கடத்தலினுல் நோயாளிகள், குறிப்பாக, ஆபத்தான நிலையிலுள்ள நோயாளிகள் பெரிதும் பாதிக்கப்படுவார்கள் என்றும் ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவித்தன.

இச் சம்பவம்பற்றி உடன் பொலிசாருக்கு புகார்செய்யப்பட்டது. (க)

### வடக்கு நீர்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

முடிக்கப்பட்டுள்ளதாகவும் இதற்கு மூன்று கோடி ரூபா வரை செலவாகியுள்ளதாகவும் கூறப்பட்டது.

குடத்தனை, வல்லிபுரம் பகுதிகளில் பாரிய நீர் சேமிப்புக் கிணறுகள் அமைக்கும் வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன

#### அலன் தம்பதிகள் கடத்தல்

றூலிஸ் கம்பனியின் பிரதம பொறியியலாளராக இருந்து வேலைகளை மேற்பார்வை செய்துவந்த அலன் தம்பதிகள் கடந்த மே 9ம் திகதி கடத்தப்பட்ட காலத்தில் வேலைகளில் தாமதம் ஏற்பட்டபோதிலும், ஜூலை 16ல் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டது.

அதன்பின்னர் மேற்குறிப்பிட்ட இரு கம்பனிகளிலுமிருந்து சுமார் ஆறரை லட்சம் ரூபா பெறுமதியான வாகனங்களும் கொள்ளையடிக்கப்பட்டதைத் தொடர்ந்தே. நீர் விநியோகஅமைப்பு வேலைகளை நிறுத்திவைக்கும்படி அறிவித்தல் ஒன்று நேற்று முன்தினம் கிடைத்ததாக கம்பனியின் பொறுப்புவாய்ந்த உத்தியோகத்தர்ஒருவர் தெரிவித்தார்.

#### ஆறரை லட்சம் ரூபா கொள்ளை

ஆகஸ்ட் 17ம் திகதி போட்டோ பிரதிஇயந்திரம் [60 ஆயிரம் ரூபா], பைப் துளைக்கும் கருவி (3 ஆயிரம்). செப்டம்பர் 7ம் திகதி டெலக்ஸ் (ஒன்றரை லட்சம் ரூபா), கல்குலேட்டர் (2ஆயிரம்), தட்டச்சு இயந்திரம் (7500 ரூபா) செப். 8ம் திகதி 28 ஸ்ரீ 8364 இலக்க ட்ரக் (இரண்டேகால்லட்சம் ரூபா), செப்டம்பர் 9ம் திகதி நண்பகல் 28 ஸ்ரீ 1920 இலக்க ட்ரக் (இரண்டேகால் லட்ச ரூபா), என்பன கொள்ளையடிக்கப்பட்டதாகவும் அந்த அதிகாரி தெரிவித்தார். (மா)

### கடத்தப்பட்ட...

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

ணம்- கருணுகரன் என்ற [17 வயது] பிரபல கல்லூரி ஒன்றின் மாணவன் தமது வீட்டுக்கு காரில் வந்துசேர்ந்தார்.

சில இளைஞர்களின் முயற்சியால் இவர் விடுக்கப்பட்டதாகத் தெரிகிறது. கருணுகரனுக்கு எதுவித தீங்கும் விளைவிக்கவில்லை என்று தெரியவருகிறது.

'வெளிநாடு' செல்வது சம்பந்தப்பட்ட கொடுக்கல் வாங்கல்களினுலேயே இச்சம்பவம் நடைபெற்றதென்றும் கடத்தல் நடந்த பின்னர் சமரசம் ஏற்பட்டதினுல் அவர் விடுவிக்கப்பட்டார் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

### குமார்...

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

பில் திரு குமார் பொன்னம்பலம் ஆஜரான போது எதிரிதரப்பில் ஆஜரான சட்டத்தரணி திரு தேவகுமார ரணதுங்கா ஆட்சேபம் ஒன்றை கிளப்பினுர்.

அரசியலமைப்பு சட்டத்தின் படி பிரிவினையை எதிர்த்து சத்தியப்பிரமானம் செய்யாததால் வழக்கில் ஆஜராக முடியாது என்று திரு. ரணதுங்க ஆட்சேபம் கிளப்பியதைத் தொடர்ந்து தாம் சத்தியப் பிரமாணம் எடுத்துவிட்டதாக திரு குமார் பொன்னம்பலம் தெரிவித்தார்

இதனைத் தொடர்ந்து விசாரணை நடைபெற்றது.

### பயங்கரவாத...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வாதத்தை சர்வதேச ரீதியில் முறியடிப்பது தொடர்பான பிரேரணை ஒன்றை இலங்கை தாக்கல் செய்யவுள்ளது பற்றியும் அமைச்சர் அறிவித்தார்.

இம் மாநாட்டில் கலந்து கொள்ள சபாநாயகர் தலைமையில் செல்லுங் குழுவில் அமைச்சர்கள் திரு. அல்விஸ், திரு. விஜபாலமெண்டிஸ், பாராளுமன்றச் செயலாளர் திரு. நிஹால் செனவிரத்ன ஆகியோர் கருத்துகொள்கின்றனர்.

இந்தப் பிரேரணையை இந்தியா ஆதரிக்குமா என்று நிருபர் ஒருவர் கேட்டபோது, "இந்தியா பயங்கரவாதி அல்ல. எப்படியும்ஆதரவளிப்பார்கள் என்று நம்புவதாகக் கூறினுர். (இ)

### ஜனதிபதியை...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வர் திரு. எம. சிவசிதம்பரம், செயலாளர்நாயகம் திரு. அ. அமிர்தலிங்கம் ஆகியோர் ஜனதிபதியிடம் இன்று சமர்ப்பிக்கவுள்ளனர்.

யாழ்ப்பாண மக்களின் நன்மைகருதி

# போட்டோ பிரதியந்திரங்களை ஒப்படைக்கக் கோரிக்கை

[யாழ்ப்பாணம்]

யாழ் செயலகத்திலுள்ள யாழ். மாவட்ட மேலதிகப் பதிவாளர் அலுவலகத்திலிருந்து எடுத்துச் செல்லப்பட்ட இரு போட்டோ பிரதிபண்ணும் இயந்திரங்களையும் யாழ். மாவட்ட மக்களின் நன்மைகருதி ஒப்படைக்குமாறு யாழ் செயலக மாவட்ட மேலதிகப் பதிவாளர் வேண்டுகோள் விடுத்துள்ளார்

இதுசம்பந்தமாக விடுத்துள்ள அறிக்கையொன்றில் யாழ். மாவட்ட மேலதிகப் பதிவாளர் பின்வருமாறு தெரிவித்துள்ளார்.

''யாழ் மாவட்ட மக்கள் தங்கள் ஆள் அடையாள அட்டைகளைப் பெற்றுக்கொள்வதற்கும், வேலைவாய்ப்பு, கல்வி வாய்ப்புப் பெற வெளி நாடு செல்வதற்கான கடவுச் சீட்டுக்களைப் பெற்றுக்கொள்வதற்கும் இன்னும் பல தேவைகளுக்குமாக, தமது பிறப்பு, இறப்பு, விவாக அத்தாட்சிப் பத்திரங்களைக் கோரி நாளாந்தம் 500 விண்ணப்பங்கள் அனுப்பி வருகின்றனர்.

''சில வருடங்களுக்கு முன்னர் இவ்விண்ணப்பங்களின் மீதான அத்தாட்சிப் பத்திரங்கள் கைகளினாலேயே எழுதப்பட்டு வழங்கப்பட்டு வந்துள்ளன. இதனால் மக்களின் தேவைகளை விரைவாக நிறைவேற்றமுடியாத நிலை இருந்தமையைக் கருத்திற் கொண்டு போட்டோ பிரதி இயந்திர மூலம் அத்தாட்சிப் பத்திரங்களை விநியோகிப்பதற்கான அனுமதியைப் பெற்று அதற்காக ஒரு லட்சத்து 50 ஆயிரம் ரூபா பெறுமதியுள்ள போட்டோ பிரதி இயந்திரங்கள் இரண்டையும் எவ்வளவோ முயற்சிசெய்து அரசாங்கத்திடம் பெற்று பொதுமக்களின் தேவையை ஓரளவு விரைவாகப் பூர்த்திசெய்து வந்தோம்.

''இந்த நிலையில் 18-9-84 காலை 8-30 மணியளவில் எமது அலுவலகத்திலிருந்து மேற்படி இயந்திரங்கள் இனந்தெரியாத நபர்களால் எடுத்துச் செல்லப்பட்டுவிட்டன.

''போட்டோ பிரதி இயந்திரங்கள் இருந்தும் ஏற்கனவே தமது பிறப்பு-இறப்பு - விவாக அத்தாட்சிப் பத்திரங்களைப் பெறுவதில் தாமதம் ஏற்படுகின்றது. நொந்திருந்த மக்களுக்கு இது ஒரு பேரிடியாகும்.

''நாளாந்த விண்ணப்பங்கள் 500 ஆக அதிகரித்திருக்கும் இவ்வேளையில் கைகளினால் எழுதிப் பொதுமக்களின் அவசரத் தேவைகளை எவ்வாறு பூர்த்தி செய்யமுடியும்?

''இந்த இரு இயந்திரங்களுக்குப் பதிலாகப் புதிய இயந்திரங்களை எதிர்காலத்தில் பெற்றுக்கொள்ள நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதற்கான நம்பிக்கை ஏதும் இல்லை.

''இந்த நிலையில் இதனை எடுத்துச் சென்றவர்கள் யாழ். மாவட்ட மக்கள்மீது அனுதாபம்கொண்டு அவர்களின் கல்வி, வேலை வாய்ப்பு, உயிர்ப் பாதுகாப்புக்கான ஆள் அடையாள அட்டைகளை இலகுவில் பெறுவதற்கு உதவியாகப் பிறப்பு அத்தாட்சிப் பத்திரங்களை விரைவில் வழங்க உதவியாக மீளவும் அந்த இயந்திரங்களைத் தயவு கூர்ந்து ஒப்படைக்கவும்.

''இவ்வேண்டுகோளை யாழ். மாவட்ட மக்கள் சார்பில் விடுக்கின்றேன்.

''இவ்வியந்திரங்களை எனது அலுவலகத்தில் ஒப்படைப்பதில் சிரமமிருக்குமாயின் தயவு கூர்ந்து வேறு எவ்வகையிலேனும் எனக்குக் கிடைக்கும்வண்ணம் ஆவனசெய்யுமாறு பணிவன்புடன்வேண்டுகின்றேன்.''

(மா)

# செய்திச்சிதறல்

## நவராத்திரி விழா

(ஊரெழு)

அடுத்தவாரம் ஆரம்பமாகவிருக்கும் நவராத்திரி விழாவை ஊரெழு அருள்மிகு மீனாட்சி அம்பாள் தேவஸ்தானத்தில் வெகு சிறப்பாக நடாத்துவதற்கு பிரதமகுரு சிவஸ்ரீ மு. கிருஷ்ணசாமிக் குருக்கள்தேவஸ்தான தொண்டர் சபையினரின் உதவியுடன் தேவையான ஏற்பாடுகளைச் செய்து வருகிறார்.

## இடமாற்றம்

[ஊரெழு]

கடந்த வருட ஜூலை வன்செயலின்போது வெளிமாவட்டங்களில் பாதிப்படைந்த ஆசிரியர்களுக்கு யாழ் மாவட்டப் பாடசாலைகளில் இடமாற்றம் வழங்கும் திட்டத்தின்கீழ் திருமதி ம. விக்கினேஸ்வரன் இம்மாதத்திலிருந்து ஊரெழு கணேச வித்தியாசாலைக்கு இடமாற்றம் பெற்று வந்துள்ளார்.

## குண்டுகள் வெடிக்கின்றன

(புலோலி)

பருத்தித்துறை வல்வெட்டித்துறை பகுதிகளில் தொடர்ந்தும் பதட்ட நிலையே நிலவுகின்றது இரவுவேளைகளில் குண்டு வெடிப்புச் சம்பவங்கள் மக்களைப் பீதியடையச் செய்கின்றன.

மீன்சந்தை மரக்கறிச் சநதை என்பன சிறிதளவு கூடுகின்ற போதும் மக்கள் நடமாட்டம் வழமையைவிடக் குறைவாகவே காணப்படுகின்றன ஒருசில கடைகள் மாத்திரம் திறக்கப்படுகின்றன. அவைகளும் நண்பகலுடன் மூடப்பட்டு விடுகின்றன.

## கொள்ளைப் பொருட்கள்

(கல்வியங்காடு)

கடந்த சனிக்கிழமை பட்டப்பகலில் யாழ். கல்வித் திணைகளத்தில் நடைபெற்ற கொள்ளையின் போது ஒரு 'போட்டோஸ்ரட்' இயந்திரம் ரண்டு தமிழ்தட்டச்சு இயந்திரம் ஒருசிங்கள தட்டச்சு என்பன எடுத்துச் செல்லப்பட்டுள்ளன.

## 540 றுத்தல் அசையாமணி

(பண்டத்தரிப்பு)

அராலி கருப்பிட்டி விநாயகர் ஆலயத்தில் 540 றுத்தல் எடையுள்ள அசையா மணியொன்று அமைக்கப்பட்டுள்ளது.

இவ்வாலயத்தில் சுமார் மூன்று இலட்சம் ரூபா செலவில் திருப்பணி வேலைகள் நடைபெற்று வருகின்றன.

## மீண்டும் ஆயுர்வேத வைத்திய பீடம்

[சாவகச்சேரி]

கைதடி அகதிகள் முகாம் அமைந்திருக்கும் கட்டிடத்தில் மீண்டும் சித்த ஆயுள்வேத வைத்திய பீடம் மிகவிரைவில் ஆரம்பிக்கப்படவிருக்கின்றது.

இவ்வைத்திய பீடத்தின் நிர்வாகங்களையும் விரிவுரைகளையும் நடாத்துவதற்காக முகாம் மண்டபத்தின் சில கட்டிடப்பகுதிகளை முகாம் நிர்வாகிகள் ஒதுக்கிக் கொடுத்துள்ளனர்.

## பொதுக்கூட்டம்

பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பு பாவனையாளர் பாதுகாப்புச் சங்கத்தி வருடாந்தப் பொதுக்கூட்டம் வரும் 22-ம் திகதி பிற்பகல் பண்டத்தரிப்பு வை. எம். சி. ஏ மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இதற்கான ஒழுங்குகளை சங்கச் செயலாளர் திரு. என். எம். கந்தசாமி செய்துள்ளார்.

## பொன்விழா

(கரவெட்டி)

கரவெட்டி புனித லூர்து (சென். லூட்ஸ்) கன்னியர் மடத்தின் 25-வது வெள்ளி விழா இம்மாதம் 22-ம் திகதி நடைபெறுகிறது.

## பிரசுரம்

[யாழ்ப்பாணம்)

'தமிழீழ புரட்சிப் பேரவை' முன்அறிவித்தல் என்ற தலைப்பிட்டு துண்டுப்பிரசுரம் ஒன்றை வெளியிட்டுள்ளது.

''தமிழ் பேசும் மக்களின் பிரச்னை தொடர்பான அரசின் தீர்வு முன்வைக்கப்படும் தினமான 21-ம் திகதி அடுத்து தமிழ்மக்களின் பாதுகாப்பு நிலைமை குறித்து அப்பிரசுரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

(மா]

## பொதுக்கூட்டம்

(ஊரெழு)

ஊரெழு கலைவாணி சன சமூக நிலையத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் வரும் 22-ம் திகதி சனிக்கிழமை காலை ஊரெழு கணேச வித்தியாசாலை மண்டபத்தில் நடைபெறவிருக்கிறது.

## நிறுத்தம்

(அரியாலை)

நல்லூர் கிராமச் சபையில் பணிபுரியும் சுகாதார தொழிலாளர்களுக்கென திருநெல்வேலி கலாசாலை வீதியில் அமைக்கப்பட்ட குழாய் நீர் விநியோகத்திட்ட வேலைகள் இடைநடுவில் நிறுத்தப்பட்டுள்ளது.

## பயிற்சி வகுப்பு

[சாவகச்சேரி]

நுணாவில் அம்பாள் சன சமூக நிலையத்தின் சார்பாக நிலையமண்டபத்தில் ஒரு வார கால முதலுதவிப் பயிற்சி வகுப்பு ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

## நேர்முகப்பரீட்சை

(பண்டத்தரிப்பு)

சங்கானை கோவில் பற்று பிறப்பு,இறப்பு, விவாகப் பதிவாளர் பதவிக்கான நேர்முகப் பரீட்சை கடந்த 14 ம் திகதியன்று சித்தன்கேணி கணேச வித்தியாலய மண்டபத்தில் நடைபெற்றபோது 24 விண்ணப்பதாரிகள் சமூகமளித்திருந்தனர். யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் திரு எம். பஞ்சலிங்கம், யாழ் மாவட்ட மேலதிக பதிவாளர் திரு எஸ். இராசையா, உதவி அரசாங்க அதிபரும், பொதுசனத் தொடர்பு உத்தியோகத்தருமான திரு. எஸ் சண்முகசுந்தரம் ஆகியோர் இந்த நேர்முகப் பரீட்சையை நடாத்தினர்.

## நஞ்சருந்தி தற்கொலை

[கிளிநொச்சி]

பேரப்பிள்ளையின் பிறந்த நாளிற்கு அன்பளிப்புச் செய்வதற்காக பவுண்நகை வேண்ட பணம் இல்லையே எனக்கவலை கொண்ட ஒருவர் மனவருத்தம் தாங்காதுநஞ்சிடம் தஞ்சமடைந்து மரணமானார்

முரசுமோட்டையில் வசித்து வந்த கி.குணரத்தினமே இவ்வாறு மரணமானவராவர் இம்மரணம் சம்பந்தமான விசாரணையை மேற்கொண்ட கிளிநொச்சிப்பகுதி மரணவிசாரணை அதிகாரி யோகலிங்கம் தற்கொலை எனத்தீர்ப்பு வழங்கினார்.

# ''ஆசிரியர் ஆசிரியரை மதிக்க வேண்டும்!''

(மானிப்பாய்)

''ஆசிரியர் ஆசிரியரை மதிக்க முன்வரவேண்டும். அப்போதுதான் அவர்களுடைய மதிப்பு வளரும். பிறர் நமக்கு மதிப்புத்தருகின்றார்களா? என்பதைப்பற்றி நாம் பார்த்துக்கொண்டிருப்பதைவிட நமக்குள் நாம் மதிப்பைத் தருகின்றோமா என்பதைப் பார்த்துக்கொள்ளவேண்டும்''

இவ்வாறு இளைப்பாறிய அதிபர் திரு க. தம்பிராசா தமக்கு அளிக்கப்பட்ட பாராட்டுக்கு நன்றிதெரிவித்துப் பேசுகையில் கூறினார்.

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் மானிப்பாய் கிளையின் வருடாந்தப் பொதுக்கூட்டம் யாழ். சுன்னாகம் இராமநாதன் கல்லூரி மண்டபத்தில் சென்ற சனிக்கிழமை காலை நடைபெற்றபோது சென்றமுறை நிர்வாகசபையில் கடமையாற்றி இளைப்பாறிய அதிபர்களான திருவாளர்கள் செ. தில்லைநாதன், க. தம்பிராசா, ஆசிரியர் திரு மு. பாலசுப்பிரமணியம் ஆகியோரின் சேவை பாராட்டிக் கௌரவிக்கப்பட்டது.

திரு. செ. தில்லைநாதன் உரையாற்றுகையில் ஆசிரியர்களது உளமும் உடையும் தூய்மையாக இருப்பது அவர்களது மதிப்பை உயர்த்த உதவும் எனக் கூறினார்.

திரு. மு. பாலசுப்பிரமணியம் தமது உரையில் தெய்வீக பக்தி வாழ்க்கையைச் செம்மைப்படுத்தி சிறப்புக்களைத்தர மிகவும் உதவும் எனக் குறிப்பிட்டார்.

திருவாளர்கள் நா. நடராசா க. சுந்தரலிங்கம், அ. தற்பரானந்தன் ஆகியோர் பாராட்டுரை வழங்கினார்கள்.

சிறப்பு விருந்தினர்களாக இலங்கை தமிழர் ஆசிரியர் சங்க பொதுச்செயலாளர் திரு. த. மகாசிவம், ஆசிரியன் பத்திரிகைச் செயலாளர் திரு. பஞ்சாட்சரம், யாழ் மாவட்டச் செயலாளரும் கடன் வழங்கு சபை செயலாளருமான திரு வே. சி. சிவபாலசிங்கம் ஆகியோர் கலந்துஉரையாற்றினர்.

திரு செ. சோதிப்பெருமாள் நன்றி கூறினார்

நடப்பு வருட உத்தியோகத்தர்களாக பின்வருவோர் போட்டியின்றி ஏகமனதாகத் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர் திரு. த. நடராசா உபதலைவர்கள் திருவாளர்கள் நா. நடராசா, ஜ. நவரத்தினம், செயலாளர்: திரு. செ.சோதிப்பெருமாள் ஜே. பி. பொருளாளர் க. சுந்தரலிங்கம், நிர்வாகக்குழு உறுப்பினர்கள் திருவாளர்கள் ஐ. பொ. மகாலிங்கம், நா கணேசபிள்ளை, வ. க துரைசிங்கம்: க. முருகுப்பிள்ளை, ஜி. வி. இராதாக்கிருஷ்ணன், க. சிவஞானம்: ச. கந்தசாமி; பொ. இரா. நடராசன், ப. ஆனந்த மகேஸ்வரன், ந. சிவபாதம், கணக்குப்பரிசோதகர்கள் திரு. அ. மகாலிங்கம். திரு, க. தட்சணாமூர்த்தி.

# கரவெட்டியிலும் பிரஜைகள் குழு

(கரவெட்டி)

கரவெட்டி உதவி அரசாங்க அதிபர் பிரிவு மக்களின் நன்மை கருதி கரவெட்டியிலும் 'பிரஜைகள் குழு, அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டுள்ளது.

தலைவர்:- சட்டத்தரணி திரு. சி செல்லையா, உப தலைவர்கள்:- வண. பிதா. எவ். ஞான ஆனந்தன், அருட்திரு. எஸ். கதிர்காமர், திருவாளர்கள் எம். எஸ். சீனித்தம்பி, கே. செல்லையா. இணைச்செயலாளர்கள்:- திரு. பொன்குமாரசாமி, சட்டத்தரணி திரு வ. மகாலிங்கம், பொருளாளர்;- திரு ஏ. இராஜரட்ணம்.

பத்துப் பேர் கொண்ட ஒரு செயற்குழுவும் தெரிவு செய்யப்பட்டது

# இன்றைய பலன்

மாதம்—புரட்டாதி
திகதி—4(20-09-1984)
வாரம்—வியாழன்
திதி—தசமிஇரவு 8-08வரை
நக்ஷத்திரம்—புனர்பூசம் இரவு 7-18 வரை

மேடம்:- கடமையில் அதிக ஆர்வம் பிறக்கும் எதையும் துரிதமாகச் செய்யின் வெற்றி காண்பீர்கள், சிலருக்கு நன்மையான இட மாற்றம் ஏற்படலாம் தெய்வத்தின் துணையுமுண்டு.

இடபம்:- புதிய தொழில் மூலம் இலாபம் கிடைக்கும் புத்திரர்களுடைய செல்வாக்குப் பெருகும் புதுமையான எண்ணங்கள் மனதில் வட்டமிடும்.

மிதுனம்:- அதிகாரக் குறைவிற்கு இடமுண்டு அபாயகரமான தொழில்களில் ஈடுபடுபவர்கள்அதிக கவனம் செலுத்தவேண்டும் அவசர நடவடிக்கைகளை தவிர்க்கவும்.

கடகம்:- அதிக சிந்தனை சிறிய தலையிடியைக் கொடுக்கும் உடல் நலம் பாதிக்கப்படலாம் வீண் பொருள்களில் பணம் விரயமாகலாம்.

சிங்கம்:- வசதிகள் பெருகும் வாழ்க்கையும் வளமாகும் தொழில் துறையில் புதிய வெற்றிகள் கிடைக்கும் இன்று சுப நாள்.

கன்னி:-பொருள் துறையில் எதிர்பாராத நெருக்கடி ஏற்படும் புதிய முதலீடுகளைத் தவிர்க்கவும் தொழில் புரியும் இடத்தில் போட்டி மனப்பான்மையைத் தவிர்த்துக் கொள்ளவும் சகோதர சுகக் குறைவிற்கும் இடமுண்டு.

துலாம்:- தாய் வழியால் பெருமைகள் சேரும் தனத்துடன் வாழ்வும் கிடைக்கும் எதிரிகள் கூட உங்களைவரவேற்பார்கள்.

விருச்சிகம்:- நீண்ட நாள் கடன் இன்று நிவர்த்தியாகும் பிணியகலும் உங்கள் உதவிக்கு புத்திரர் விரைவர்.

தனுசு:- பிரயாணத்தில் பொருள் நழுவக் கூடும் நம்பிக்கை வைப்பதன் மூலம் பணம் பறி போகலாம் புதிய தொழில்களை இன்று பிறபோடவும்.

மகரம்:- குடும்ப வாழ்வில் மனதிற்கு நிம்மதி பிறக்கும் நீண்ட நாள் பூசிப் பிணக்கு சமரசமாக முடிவடையும் காதல் விவகாரங்களுக்கும் இட முண்டு

கும்பம்:- திரைமறைவில் சதித்திட்டம் உருவாகும் அடுத்துக் கெடுப்பதற்கு எதிரிகள் முனைவர் சிலருக்கு நூதனரோகம் தென்படலாம்.

மீனம்:- அன்புக் கரங்கள் அணைக்கும் அதிர்ஷ்ட தேவதையின் பார்வையும் பதியலாம் தக்க சமயத்தில் தந்தையின் ஆதரவும் கிடைக்கும் குருவின் உபதேசம் வாழ்க்கைக்கு வழி காட்டியாக அமையும்.

திருமலை
வே. ரவீந்திரன்

# பீரங்கிக் குண்டுத் தாக்குதல் நடைபெறுது என்று அமைச்சர் உறுதி

[யாழ்ப்பாணம்]

வடபகுதியில் கடற் பகுதியிலிருந்து பொது மக்கள் வசிக்கும் இடங்கள் மீது பீரங்கிக் குண்டுத் தாக்குதல்கள் இனி மேல் இடம்பெற மாட்டாது என்று பாதுகாப்பு, பந்தோபஸ்து அமைச்சர், யாழ் அரசாங்க அதிபர் திரு. எம் பஞ்சலிங்கத்துக்கு உறுதி அளித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வல்வெட்டித்துறையில் இடம்பெற்ற சம்பவத்தை தொடர்ந்து, கடற்பகுதியிலிருந்து தினமும் பீரங்கிக் குண்டுத் தாக்குதல் இடம்பெறுவதாகவும், இதனுல் வீடுகள் தாக்கப்படுவதுடன் பொது மக்களும் உயிரிழந்துள்ளதாகவும், இளம் பெண்களும், கர்ப்பிணிகளும் பாதிக்கப்படுவதாகவும் அவ்வப்பகுதி பிரஜைகள் குழுவினர்யாழ்அரசாங்க அதிபருக்குப் புகார் செய்திருந்தனர்.

வல்வெட்டித்துறை பிரஜைகள்குழுவினர், காரைநகர்கடற்படைப் பொறுப்பதிகாரியை நேரில் சந்தித்தும் முறையிட்டிருந்தனர்.

சிதறி வெடித்த பீரங்கிக் குண்டுகளின் சன்னங்களையும் பிரஜைகள் குழுவினர் காண்பித்திருந்தனர்.

திரு. எம். பஞ்சலிங்கம் பீரங்கிக் குண்டுகளினுல் பாதிக்கப்பட்டவர்களின் நிலைமை பற்றி பந்தோபஸ்து அமைச்சர், வடபகுதி பிரிகேடியர் நளின் செனிவிரத்தின, பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் திரு. சேபால அட்டிகல ஆகியோருக்கு விளக்கமாகக் கூறியுள்ளார்.

இனிமேல் இப்படியான சம்பவம் நடைபெருதென்றும், மேற்கொண்டு நடந்தால் உடனடியாக தங்களுக்குத் தெரிவிக்கவேண்டும் என்றும், சம்பந்தப்பட்டவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படுமென்றும் தெரிவிக்கப்பட்டதாக யாழ். அரசாங்க அதிபர் திரு. எம். பஞ்சலிங்கம் தெரிவித்தார்.

(மா)


**ஸ்ரீதர்** (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-30
சிவாஜி-மஞ்சுளா
**உத்தமன்**
நாளை முதல்
அவள் ஒரு தொடர் கதை

**சாந்தி** (யாழ்நகர்)
10-30, 2-30, 6-30,
எம். ஜி. ஆர்.
ஜெயலலிதா
ஒருதாய்மக்கள்
— புதிய பிரதி —

**மனோகரா** (யாழ்நகர்)
தினசரி 10-30, 2-30, 6-15,
சுந்தாரராஜன் —
ஏ. வி. எம். ராஜன்
ஜெயலலிதா
மேஜர் சந்திரகாந்த்

**ஹரன்** (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-30
எம். ஜி. ஆர்.
ஜெயலலிதா-நம்பியார்
அரசகட்டளை
இந்தியாவிலிருந்து தருவிக்கப்பட்ட புதிய பிரதி.

**ராணி** (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-30
ரஜனி காந்த்
தில்லு முல்லு
(கலர்)

**ராஜா** (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-00
சிவாஜி - கே.ஆர்.விஜயா
தவப்புதல்வன்
(புதிய பிரதி)

**வின்ஸர்** [யாழ்.]
19—21
தினசரி 10-30, 2-00, 4-30
Charles Bronson
in
AVALANCHE
EXPRESS
(Colour - Action Packed)

**றீகல்** [யாழ் நகர்]
10-30, 2-30, 6-00
ஜெய்சங்கர் - ராதிகா
நாகேஷ்
ரத்தத்தின் ரத்தமே
(புதியபிரதி - ஈஸ்மன்கலர்)

**லிடோ** யாழ். நகர்
தினசரி 10-30, 2-30,
சுபதினம்
21 - 9 - 84 முதல்
THE BURNING

**வெலிங்டன்**
(யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 4-45,
20-9-84 வரை
நீடிக்கப்பட்டுள்ளது.
TEN
(Adults only)
21 - 9 -84 முதல்
ஞான ஒளி


## ரூபவாஹினி

மாலை
5-30 நியுஸீ றிவியு (ஆங்கிலம்)
6-00 'ஹியர்ஸ் பூமர்' (ஆங்கிலம்)
6-25 'ரொம் அன்ட் ஜெரி' (ஆங்கிலம்)
6-55 செய்திகள் (தமிழ்)
7-15 'காதம்பரி' மாதாந்த பல்சுவை நிகழ்ச்சி (தமிழ்)
7-45 தகவல் நிகழ்ச்சி (சிங்களம்)
8-15 செய்திகள் (சிங்களம்)
8-35 'ரன்கஹவனு' நாடகம் (சிங்களம்)
9-05 'ஜெபர்சன்' நகைச்சுவைதொடர்ச்சி (ஆங்கிலம்)
9-30 செய்திகள் (ஆங்கிலம்)
10-00 'கலாசூரி' விருதுகள்84
10-30 உலகச் செய்திகள்
11-00 நிகழ்ச்சிகள் முடிவு

# கிரிக்கெட் அபிவிருத்திக் குழு

(புலோலி)

பருத்தித்துறை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் கிரிக்கெட் விளையாட்டை அபிவிருத்தி செய்வதற்கெனக் குழுவொன்று அங்குரார்ப்பணம் செய்யப்பட்டுள்ளது.

இக்குழுவின் உறுப்பினர்கள் விபரம்: தலைவர்: திரு. வை வேலும்மயிலும் (உதவி அரச அதிபர்), உபதலைவர்கள்: திரு. என். சிவகுமாரன் திரு. கே. சிவநாதன். செயலாளர்: திருமதி ஸ்ரீவசந்தி கெங்கேஸ்வரன், உபசெயலாளர்: திரு. எஸ். வசந்தன், பொருளாளர்: திரு. கே. துரைராசா, செயற்குழு உறுப்பினர்கள்: திரு. எஸ். ஸ்ரீதரன், திரு. கே. பாலசிங்கம், திரு. ஆர். பிரபாகரன், திரு. வி. கருணைதாசன்,

# பணத்தட்டுப்பாடு நீங்க நடவடிக்கை

(இறுப்பிட்டி)

புங்குடுதீவு தபால் கந்தோரில் நீண்டகாலமாக இருந்து வரும் பணத்தட்டுப் பாட்டை போக்க புதியயோசனை ஒன்று மக்களால் தெரிவிக்கப்பட்டதாக அறியப்படுகிறது.

புங்குடுதீவு ப.நோ.கூ. சங்கத்தின் பணத்தை பெற்று அருகாமையில் அமைந்துள்ள தபால் அலுவலகத்திற்கு கொடுப்பதற்கு வழிசெய்வதன் மூலம் இப் பகுதிமக்கள் பெரிதும் நன்மையடைவார்கள்.

நீண்டகாலமாக இவ் அலுவலகத்தில் பணபற்ருக்குறை தொலைபேசிசேவை துண்டிக்கப்பட்டுள்ளது என்ற வாசங்களே தொங்க விடப்பட்டுள்ளது. ஆயினும் அஞ்சல் அதிபரின் முயற்சியினுல் நளாந்தம் வரும் பணத்தை கொண்டு ஓய்வூதியம் வழங்கப்பட்டு வருகிறது.

# குண்டுக்குப்பலியான இளம்கர்ப்பிணி கலாவதி காதலித்து மணம்முடித்தார்!

(யாழ்ப்பாணம்)

கரணவாயில் குண்டுக்குப் பலியான இளம் கர்ப்பிணி கலாவதியைத் தமது தம்பி காதலித்துத் திருமணம் செய்ததாகவும், தம்பி தங்கத்துரை கலாவதியின் சொந்த மச்சான் என்றும் இவர்கள் முருகண்டியில் திருமணம் செய்துகொண்டார்கள் என்றும் தங்கத்துரையின் சகோதரரான ந. செல்லத்துரை கூறினுர்.

திருமணத்தின்பின் அவர்கள் கரணவாயில் வாழ்ந்து வந்ததாகவும், இருவரும் ஒற்றுமையாக இருந்ததாகவும் அவர் தெரிவித்தார்.

கலாவதி இறந்த மறுதினம் காலையில் தான் மந்திகை ஆஸ்பத்திரிக்குச் சென்றதாகவும், அங்கே சிகிச்சை பெற்றுவந்த தம்பி தங்கத்துரை 'கலாவதி சுகமா' என்று கேட்டதாகவும் 'ஆம்' என்று தான் பதிலளித்ததாகவும் சொன்னுர்.

கலாவதி இறந்தது விடயம் பற்றி நண்பகல் வரை தமது தம்பிக்குத் தெரியாதென்றும் கூறினுர்.

பின்னர்தான் மந்திகை ஆஸ்பத்திரியில் டாக்டரை நேரில் சந்தித்து விஷயத்தைக் கூறியபோது மரணச் சடங்கிற்கு அவரை அழைத்துச் சென்றுவிட்டுப் பின் வார்ட்டில் அனுமதியுங்கள் என ஆலோசனை கூறியதாகவும் தெரிவித்தார்.

கரணவாயிலிருந்து கலாவதியை முதலில் மந்திகை ஆஸ்பத்திரியில் அனுமதித்ததாகவும், பின் மந்திகையில் அதே வானில் கலாவதியை யாழ்.ஆஸ்பத்திரிக்கு கொண்டு செல்லப் புறப்பட்டபோது அவரதுவிரலில் திருமணமோதிரம் இருந்ததாகவும், பின் யாழ். ஆஸ்பத்திரி வார்ட்டில் அவர் அனுமதிக்கப்பட்டு மரணம் ஆனபின் ஆஸ்பத்திரி ஊழியர் தோட்டையும், மூக்குத்தியையும் கழட்டித் தந்ததாகவும் அப்போது கைவிரலில் மோதிரம் காணப்படவில்லையென்றும் தெரிவித்தார்.

(சு)

# காரில் வந்த ஏழு துப்பாக்கிஇளைஞர் வானில் சென்றவர்களிடம் ரொக்கம், நகை கொள்ளை!

[பண்டத்தரிப்பு]

பண்டத்தரிப்பிலிருந்து முரசுமோட்டையில் நடைபெற்ற மரணச்சடங்கு ஒன்றில் கலந்து கொள்ள வான் ஒன்றில்சென்றவர்களை வழிமறித்து றிவோல்வரைக் காட்டிப் பயமுறுத்திப் பெண்கள் அணிந்திருந்த சுமார் 20 ஆயிரம் ரூபா பெறுமதியான நகைகளையும்,600 ரூபா ரொக்கப் பணத்தையும் கார் ஒன்றில்வந்த ஏழு இளைஞர்களைக் கொண்ட கோஷ்டியொன்று கொள்ளையடித்துச் சென்றுள்ளது. கடந்த வெள்ளிக் கிழமையன்று பிற்பகல் இரண்டு மணியளவில் பண்டத்தரிப்பைச் சேர்ந்த சிவசுப்பிரமணியம் என்பவர்தமது குடும்பத்துடன் முரசுமோட்டையில் நடக்கும் உறவினர் ஒருவரின் மரணச் சடங்கில் கலந்து கொள்வதற்காகவான் ஒன்றில் சென்று கொண்டிருந்தாராம். புத்தூருக்கும் மட்டுவிலுக்கும் இடையில் வண்ணுத்திப் பாலம் என்னுமிடத்தில் 11 ஸ்ரீ 430 என்னும் இலக்கமுடைய வெள்ளை நிறக்கார் ஒன்றில் திடீரென அவ்விடத்தில் வந்து இறங்கிய நீளக் காற்சட்டை அணிந்தவர்களான ஏழு இளைஞர்கள் வானை மறித்து அதிலிருந்தவர்களை துப்பாக்கி முனையில் இறக்கிவிட்டு வானை தமக்கு தருமாறு கேட்டு வற்புறுத்தினுர்களாம். தாங்கள் அவசரமாக மரணக் கிரியைக்கு போகவேண்டியிருப்பதாகக் கூறவே இளைஞர் கோஷ்டியினர் தங்களுக்கு காசு 10 ஆயிரம்தரவேண்டும் என்று கேட்டார்களாம். வானில் வந்தவர்கள் தங்களிடம் டீசல் வாங்க 600 ரூபா மட்டுமே இருப்பதாகக் கூறவே அதனை காரில் வந்த இளைஞர் கோஷ்டி பறித்துக் கொண்டு வானில் இருந்த பெண்கள் அணிந்திருந்த சுமார் 20 ஆயிரம் பெறுமதி மிக்க இரண்டு தங்கச் சங்கிலிகள், இரண்டுசோடி காப்புகள் ஆகியவற்றை கைத்துப்பாக்கியைக்காட்டி பயமுறுத்தி பலாக்காரமான முறையில் அபகரித்துக் கொண்டு காரில் ஏறிச்சென்றுவிட்டனராம். இக்கொள்ளைச் சம்பவம் பற்றி காங்கேசன்துறை பொலிசில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

# "கிறீன்பீல்ட்", அன்ரனிஸ் சாம்பியன்கள்!

(யாழ்ப்பாணம்)

''இன்றைய இக்கட்டான இந்த காலகட்டத்தில் நாம் இந்தப் போட்டியை நடாத்தி முடித்ததையிட்டு மிகவும் சந்தோஷமடைகின்றேன்.''

இவ்வாறு 'யாழ். உதைபந்தாட்ட லீக்' ஆதரவில் நடைபெற்ற உதைபந்தாட்ட 'நொக்கவுட்' போட்டியின் பரிசளிப்பு விழாவில், மேற்படி லீக்கின் தலைவர் டாக்டர் ஜே. பி. ஸி. பிலிப் கூறினுர்,

அவர் மேலும் கூறியதாவது, 'இக்காலகட்டத்தில் நாம் இப்போட்டியை சிறப்பாக நடாத்துவதற்கு உதவிய கழகங்களுக்கும், குறிப்பாக வீரர்களின் பெற்றோருக்கும் நான் நன்றிகூறக் கடமைப்பட்டுள்ளேன். வருங்காலத்தில் நாம் முன்னுள் சிறந்த உதைபந்தாட்ட வீரர்களை கௌரவிக்க இருக்கிறோம். அதன் முதற் கட்டமாக, நாம் இன்றைய பரிசளிப்பு விழாவிற்கு பாஷையூர் முன்னுள் உதைபந்தாட்ட வீரர் திரு. எஸ். இம்மனுவல் அவர்களை பிரதம அதிதியாக அழைத்துள்ளோம்' என்ருர்.

பரிசளிப்பு வைபவத்துக்கு முன், 'பி' பிரிவுப் கோஷ்டிகளின் சாம்பியன் மோதல் இடம் பெற்றது. இப்போட்டியில் பாஷையூர் சென். அன்ரனிஸ் கழகமும், அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழகமும் மோதிக் கொண்டன; போட்டியின் முடிவில், பாஷையூர் சென், அன்ரனிஸ் கழகம் 2—1 கோல்களால் வெற்றி பெற்று சாம்பியன் கிண்ணத்தை தட்டிக் கொண்டது.

இப்போட்டிக்கு ஏ. தேவராசா மத்தியஸ்தம் வகித்தார்.

'ஏ' பிரிவுப் போட்டியில், யாழ்ப்பாணம் 'கிறீன்பீல்ட்' கழகம் சாம்பியன் கிண்ணத்தைப் பெற்றது. இப்போட்டிகள் அனைத்தும் பாஷையூர் சென். அன்ரனிஸ் கழக மைதானத்தில் நடைபெற்றன.

(வி)

# பனைவளக் கைப்பொருட்கள் உற்பத்தி போட்டி முடிவுகள்

(கொழும்புத்துறை)

கல்வயலில் நடைபெற்ற பனைவள அபிவிருத்திக் கண்காட்சியை முன்னிட்டுக் கூடுதலான அளவு பனைவளக் கைப்பணிப் பொருட்களை உற்பத்திசெய்பவர்களைத் தெரிவு செய்வதற்கான போட்டி நடாத்தப்பட்டது.

கல்வித்திணைக்களம், பலநோக்குக்கூட்டுறவுச் சங்கம், பொதுஸ்தாபனங்கள் இலங்கைப்பனை அபிவிருத்திச்சபையுடன் இணைந்து கல்வயல் ஸ்ரீ சண்முகானந்த வித்தியாசாலையில் இக்கண்காட்சியை நடாத்தின.

அதிகளவு தரமான பனங்கைப்பணிப் பொருட்களை உற்பத்தி செய்தவர்களுக்கான போட்டியில் திருமதி சின்னம்மா விஞயகமூர்த்தி முதற் பரிசையும், செல்வி. எஸ். சகுந்தலா இரண்டாவது பரிசையும், திருமதி இராஜேஸ்வரி துரைச்சாமி மூன்ருவதுபரிசையும் தட்டிக்கொண்டனர். சிறப்புப் பரிசில்களைப் பெற்றுக் கொண்டோர் விபரம் வருமாறு:-

செல்வி எஸ். சகுந்தலா, செல்வி என். தேவமலர், செல்வி. வி. மனோன்மணி, செல்வி. எஸ். வளர்மதி, செல்வி து. சத்தியபாமா, செல்வி பீ. அன்னலட்சுமி, செல்வி வே. மகேஸ்வரி.

## நல்லூர்

[2ம் பக்கத் தொடர்ச்சி]

படும்.

1983-ம் ஆண்டு சங்கம் இலாபத்தில்இயங்கியதனை அறிக்கை சுட்டிக்காட்டியதனுல் மேற்படி சங்க இயக்குநர் சபைக்கொடுப்பனவுகளைக் கொடுக்கத் தீர்மானித்துள்ளது. இதனுல் நூற்றுக்கும் அதிகமான சங்க ஊழியர்கள் நன்மையடைவர்,

## எதற்கும்...

(2-ம்பக்கத் தொடர்ச்சி)

திரு. பி. கணேசலிங்கம் தலைமையில் நடைபெற்ற இவ் வைபவத்தில் கிளிநொச்சி கிசேட சேவை அலுவலர் திரு. எஸ். தர்மபாலனும் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டார்.

திரு. பி. கணேசபிள்ளை மீண்டும் பொன்னகர் கிராம முன்னேற்றச் சங்கத் தலைவராகத் தெரிவானுர். செயலாளராக திரு எஸ்.கதிரேசனும், பொருளாளராக திரு. கே. இராமச்சந்திரனும் தெரிவானுர்கள்.

## யாழ். மாநகராட்சியில் [illegible]
# வீதி திருத்தும் வேலையாட்கள் வேறுபகுதிகளுக்கு மாற்றம்

(கல்வியங்காடு)

யாழ். மாநகராட்சி மன்ற வீதித் திருத்த வேலைகளைச் செய்துவந்த ஊழியர்கள் மாநகர சபையின் ஏனைய வேலைப் பகுதிகளுக்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

அபிவிருத்தி நிதி நிறுத்தம் செய்யப்பட்டதால் வீதி வேலைகள் செய்யப்படுவது தடைப்பட்ட காரணமாகவே அவ் வேலைகளைச் செய்து வந்த தொழிலாளர் வேலைகளை இழந்து விடாமல் இருக்கும் நோக்குடன் இத் தொழிலாளர்களில் சிலர் பிறவேலைப் பகுதிகளுக்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளனர் எனத்தெரிய வருகிறது.

## பாதிப்புக்கள் பற்றி அறிவார்

(யாழ்ப்பாணம்)

துணுக்காயில் இன்று முல்லைத்தீவு அரசாங்க அதிபர் திரு கே. ஞானச்சந்திரன், கிராம சேவகர்களைச் சந்திக்கவிருக்கிறார். மக்களுக்குஏற்பட்டுள்ள பாதிப்புகள்பற்றி அவர்கள்மூலம் அறிந்துகொள்வார். (க)

## மட்டு. மாணவர் பகிஷ்கரிப்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் நேற்று மூன்றுவது நாளாக பாடசாலைகளை மாணவர்கள் பகிஷ்கரித்தனர்.

மாவட்டத்திலுள்ள பாடசாலைகள் மாணவர்களின்றி வெறிச்சோடிக் காணப்பட்டன.

## நேற்றும் கல்வீச்சு

(யாழ்ப்பாணம்)

கொழும்பிலிருந்து நேற்று பகல் யாழ்ப்பாணத்திற்கு வந்த தனியார் பஸ்ஸிற்கு நொச்சியாகமவில் கற்கள் வீசப்பட்டதாக பிரயாணிகள் தெரிவித்தனர். இச்சம்பவத்தின்போது பிரயாணிகளுக்கு காயம் எதுவும் ஏற்படவில்லை இந்தபஸ் நேற்றிரவு 6-15 மணிக்கு யாழ்ப்பாணம் வந்துசேர்ந்தது. [க]

## சுழிபுரம் குடும்பஸ்தர் மரணம்:
# கொலை எனத் தீர்ப்பு

(யாழ்ப்பாணம்)

7 பிள்ளைகளுக்கு தந்தையான சுழிபுரம் கதிரவன் இராசதுரையின் (வயது 35) மரணம் கொலை என நேற்று தீர்ப்பளிக்கப்பட்டது.

யாழ். பதில் நீதவான் க. கேசவன் மரணவிசாரணை நடத்தினார். மரணவிசாரணையில் சாட்சியமளித்த மனைவி மதிவதினி (30 வயது) கூறியதாவது:

''15-ம் திகதி காலை வேலைக்குச் சென்றவர் யாழ்ப்பாணத்திலிருந்து திரும்பி வரவில்லை. அமெரிக்க மிஷன் பாசாலைக்கு அருகில் அவரை சுட்டுப் போட்டிருப்பதாக சொன்னார்கள். நான் போகும்போது கிராமசேவகர் சடலத்தை ஆஸ்பத்திரிக்குக் கொண்டு சென்றுவிட்டார். அவரை யார் சுட்டதென்று தெரியாது. அவருக்கு எதிரிகள் கிடையாது.''

கிராம சேவகர் சி. சச்சிதானந்தன் கூறியதாவது;

''பாடசாலைக்கு அருகில் சடலம் கிடந்தது பாடசாலைச் சுவரில் ஒரு அறிவித்தல் கிடந்தது. அதில் ''மரண தண்டனை. பெயர்: க.இராசதுரை, இடம்: சுழிபுரம். போராளிகளைக் காட்டிக் கொடுத்தது. ஊரிலுள்ள அப்பாவி மக்களைக் கொடுமைப்படுத்தியது. தெருச் சண்டித்தனம் செய்தது கப்பம்; களவு செய்தது. சமூக விரோதச் செயல்களில் ஈடுபட்டது. எம்மால் பலமுறை எச்சரிக்கப்பட்டும் இச்செயல்களில் தொடர்ந்து ஈடுபட்டமையால் தவிர்க்கமுடியாத காரணத்தால் இவருக்கு மரண தண்டனை விதிக்கிறோம்'' என்றிருந்தது.

யாழ். உதவிப் பொலிஸ் இன்ஸ்பெக்டர் பேரின்பநாயகம் சாட்சிகளை ஆஜர் செய்தார். சட்ட வைத்திய அதிகாரி டாக்டர் சுப்பிரமணியம் பிரேத பரிசோதனை நடத்தினார். விசாரணையின் பின் கொலை எனத் தீர்ப்பளிக்கப்பட்டது. (க)

# வழமைபோல் பாடசாலைகள்!

(யாழ்ப்பாணம்)

வடபகுதியில் 7 நாள் பகிஷ்கரிப்பிற்கு பின்னர் நேற்று கல்லூரிகள் வழக்கம்போல் நடைபெற்றன.

மாணவர்கள் பாடசாலைக்கு வழக்கம்போல் வந்திருந்தனர்.

நேற்றுமுன்தினம் யாழ் நகரில் பாடசாலைகள் அரை நேரத்துடன் விடப்பட்ட போதிலும், நேற்று முழுநேரமும் நடைபெற்றது.

பாடசாலைசேவை பஸ்களும் நேற்று வழக்கம்போல் சேவையில் ஈடுபட்டன.

தூரஇடத்து மாணவர்களும் நேற்று பாடசாலைகளுக்கு வந்திருந்தனர். (க)

## வாகனங்கள் திரும்பின

(யாழ்ப்பாணம்)

முல்லைத்தீவிலிருந்து நேற்றுக் றுக் காலை வவனியாவுக்குச் சென்ற சகல வாகனங்களு புளியங்குளத்தில் திரும்பிவிட்டன. இ. போ. ச. பஸ்களும் வவனியாவிற்குச்செல்லவில்லை. (க)

## இன்று விசாரணை

(யாழ்ப்பாணம்)

யாழ். ஐக்கிய வியாபார சங்க எரிந்த கட்டிட இடிபாடுகளுக்குள் கண்டெடுக்கப்பட்ட எலும்புத் துண்டுகள் தொடர்பான வழக்கு யாழ்.நீதவான் எஸ்.நாகராசா முன்னிலையில் இன்று காலை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவிருக்கிறது.

யாழ். சிறு குற்றத்தடுப்பு பிரிவு பொறுப்பதிகாரி எம். முத்துதம்பி சாட்சிகளை ஆஜர் செய்வார். சபையின் நலன்களை கவனிக்க சட்டத்தரணி கே.வி.நவரத்தினம் ஆஜராவர். (க)

## ஓய்வூதியம் பெறுபவர்களுக்கு மாநகரசபை குளிர்பானம்!

(யாழ்ப்பாணம்)

யாழ். துரையப்பா விளையாட்டரங்கில் நேற்று மூன்றுவது தினமாக ஓய்வூதியம் வழங்கப்பட்டது.

நேற்றுதெல்லிப்பளை, காரைநகர், பண்டத்தரிப்பு ஆகியோர் பகுதிகளில் உள்ளவர்களுக்கு ஓய்வூதியம் வழங்கப்பட்டது.

ஓய்வூதயம் பெற வந்தவர்களுக்கு யாழ் மாநகர சபை ஆணையாளர் திரு சீ. வி.கே. சிவஞானம் குளிர்பானம் வழங்க ஏற்பாடு செய்திருந்தார். மாநகர சபை ஊழியர்கள், குளிர்பானம் வழங்கினார்கள்.

இன்று பருத்தித்துறை சாவகச்சேரி வட்டுக்கோட்டை பகுதியை சேர்ந்தவர்களுக்கு ஓய்வூதியம் வழங்கப்படும். (க)

# கொக்குவில் புதர் ஒன்றில் இளைஞரின் சடலம் மீட்பு!

[யாழ்ப்பாணம்]

கொக்குவிலிலுள்ள புதர் ஒன்றுக்குள்ளிருந்து 23 வயது இளைஞர் ஒருவரின் சடலம் நேற்று கண்டுபிடிக்கப்பட்டது.

கொக்குவில் கிழக்கு கிராம சேவகர் செ. சச்சிதானந்தன் பொலிசாருக்கு கொடுத்த தகவலைத் தொடர்ந்து இச்சடலம் மீட்கப்பட்டு யாழ் அரசினர் ஆஸ்பத்திரி பிரேத அறைக்கு கொண்டுவரப்பட்டது,

இச் சடலம் எம். கணபதி என்ற இளைஞருடையதென்று அடையாளம் காட்டப்பட்டது

யாழ். மரணவிசாரணை அதிகாரி க. கேசவன் மரண விசாரணை நடத்தினார்.

இறந்தவரின் மனைவி கற்பகம் [20 வயது] சாட்சியமளிக்கையில் கணவன் கூலிவேலை செய்பவரென்றும் கிளிநொச்சியில் 2 மாதம் இருந்துவிட்டு இங்குவந்தாரென்றும் சகோதரி வீட்டில் ஒரு கிழமை தங்கியிருந்ததாகவும், அதன்பின் ராமு என்பவர் வீட்டில் விட்டுவிட்டு வாடகைக்கு வீடு தேடிச் சென்றாரென்றும் கூறினார்.

ஆசிரியர் ஒருவரின் வீட்டில், பகுதி வீடுபார்த்து விட்டு வருவதாக கூறிச் சென்றவர் திரும்பவில்லை என்றும் கூறினார்

18ம் தேதி புதர் ஒன்றுக்குள் சடலம் கிடப்பதாக அறிந்ததாகவும் அவரின் சடலத்தின் அருகில் நச்சுத்திராவக போத்தில் இருப்பதாகவும் தெரிவித்தார்.

''வீடுகிடைக்கவில்லை என்ற மனக்கவலையினால் கணவன் தற்கொலை செய்திருக்கலாம் என்றும் மனைவிதெரிவித்தார்.

சட்ட வைத்தியஅதிகாரியை பிரேத பரிசோதனை நடத்துமாறு பணித்து விசாரணையை ஒத்திவைத்தார். (க)

## ஓய்வூதியம்

(யாழ்ப்பாணம்)

யாழ். துரையப்பா விளையாட்டு அரங்கில் இம்மாதம் 24ம் திகதி திங்கட்கிழமை அச்சுவேலிப் பகுதியைச் சேர்ந்தவர்களுக்கும் ஓய்வூதியம் வழங்கப்படும். (க)

## ஆசிரியர் கடத்தப்பட்டார்

(மாவிட்டபுரம்)

அளவெட்டி அருணோதயாக் கல்லூரி ஆசிரியரும், இளவாலையைச் சேர்ந்தவருமான திரு இராஜரட்னம் கடந்த திங்கள்கிழமை இனம்தெரியாத சிலரினால் கடத்திச் செல்லப்பட்டுள்ளார்.

இது தொடர்பாக இவரின் மனைவி கனகம்மா காங்கேசன்துறைப் பொலிசில் புகார் செய்துள்ளார்.

## யாழ். இந்துவில் கொள்ளை

[யாழ்ப்பாணம்]

யாழ். இந்துக் கல்லூரியில் இருந்து தட்டச்சு இயந்திரமும், ரோனியோ பேப்பரும் கொள்ளையடிக்கப்பட்டுள்ளன.

நேற்று முன்தினமிரவு இச் சம்பவம் நடைபெற்றது.

இனந்தெரியாத ஆறு நபர்கள் இரவு 10-30மணியளவில் கல்லூரிக்குள் புகுந்து காவலாளியைப் பயமுறுத்திவிட்டு இரசாயனகூடத்தை உடைத்ததாகவும், பின்னர் தட்டச்சு இயந்திரத்தை கொள்ளையடித்துச் சென்றதாகவும் யாழ். பொலிசில் புகார் செய்யப்பட்டுள்ளது ]மா]

## பெற்றோல் விநியோகம் சீரானது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்திலுள்ள எரிபொருள் நிலையங்களுக்கு நேற்று பெற்றோல் விநியோகம் செய்யப்பட்டது. இன்று வழக்கம்போல் விற்பனை நடைபெறும்.

யாழ். பெற்றோலியம் கூட்டுத்தாபனக் கிளை உத்தியோகத்தர் ஒருவர் மேற்கண்ட தகவலைத் தெரிவித்தார்.

கடந்த திங்கள், செவ்வாய் இரு தினங்களும், யாழ்ப்பாணத்தில் ஹர்த்தால் நடைபெற்றதல், எரிபொருள் நிலையங்களுக்கு, பெற்றோல் விநியோகிக்கப்படவில்லையென்றும் இதனால், சில இடங்களில் தட்டுப்பாடு ஏற்பட்டதாகவும் கூறப்படுகிறது. (க)

## எமது பிள்ளைகளின் எதிர்கால வாழ்வுக்கு உதவுங்கள்
### தாய்மார் யாழ். அரசாங்க அதிபரிடம் மகஜர்

(புலோலி)

''நாம் ஈன்றெடுத்த அன்புச் செல்வங்களைப் பறிகொடுக்காது அவர்களைசிறந்த கல்விமான்களாக்க சம்பந்தப்பட்டவர்களுடன் கலந்தாலோசித்து சிறந்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவ்வாறு கோரும்மகஜரொன்றை பருத்தித்துறைப் பகுதி தாய்மார்கள் பருத்தித்துறை உதவி அரசாங்கஅதிபரூடாக யாழ். அரசாங்க அதிபருக்குச் சமர்ப்பித்துள்ளனர். இம்மகஜரில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது.

''கடந்த 1ம் திகதி வடமாகாணத்திலேயே தலைசிறந்த பாடசாலைகளில் ஒன்றான ஹாட்லிக்கல்லூரியில் ஏற்பட்டீவைப்புச்சம்பவங்கள் மிகவும் கேவலமானவை. சம்பவ தினத்தன்று பாடசாலைக்கு அருகிலுள்ள பொலீஸ் நிலையத்திலுள்ளவர்கள் இப்பாடசாலையுள் புகுந்து நூல்நிலையத்திலுள்ள சுமார் 7600 நூல்களை குவித்து வைத்து எரித்ததுமல்லாமல், பலவகுப்பறைகளுக்கும் புதிய இரண்டுமாடிக் கட்டிடத்திற்கும் தீமூட்டியுள்ளனர். இத்தகைய சம்பவங்கள் நிகழ்ந்த பின்னரும் இப்பொலிஸ் நிலையத்திற்கு அருகாமையில் உள்ள ருத்தித்துறை ஹாட்லிக்கல்லூரி, பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரக்கல்லூரி ஆகிய கல்லூரிகளுக்கு எமது பிள்ளைகளை அனுப்புவதற்கு இயலாதிருக்கின்றது.

மேலும் இப்பாடசாலைகள் மட்டுமன்றி இப்படிப்பட்டசம்பவங்கள் வேறு பாடசாலைகளிலும் நிகழாது என்பதற்கு எந்த உத்தரவாதமுமில்லை அத்துடன் பல மாணவர்கள் பாடசாலைகளுக்குச் செல்லும் வழியில் இப் பொலிஸ்நிலையம் இருப்பது எமது பிள்ளைகளின் போக்கு வரத்துதிற்குப் பெரும் இடைஞ்சலாகவுள்ளது.

எனவே தாய்மாராகிய நாம் ஈன்றெடுத்த அன்புச் செல்வங்களைப் பறிகொடுக்காது, அவர்களை சிறந்தகல்விமான்களாகக் தாங்கள் சம்பந்தப்பட்டவர்களுடன் கலந்தாலோசித்து விரைவில் நடவடிக்கை எடுத்துப் பாதுகாப்பளிக்க வேண்டும்.

## 'புறஜெக்டர்' கொள்ளை

(மாவிட்டபுரம்)

தெல்லிப்பளை யூனியன் கல்லூரியில் இனப்தெரியாத இளைஞர்களினால்துப்பாக்கிமுனையில் படம் காட்டும்கருவி (புறஜெக்டர்) கொள்ளையடிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக காவலாளியான மனோகரன் என்பவர் காங்கேசன்துறைப் பொலிசில் புகார் செய்துள்ளார். (சு)

## சுருக் கெழுத்தாளர் நியமனம்

[புலோலி]

நீதிச்சேவை ஆணைக்குழுவினால் சுருக்கெழுத்தாளர்களாக நியமிக்கப்பட்ட மூன்று பேர் பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றம், பருத்தித்துறை நீதவான் நீதிமன்றம் என்பனவற்றில் சுருக்கெழுத்தாளர்களாகக்கடமை யேற்றுள்ளனர்

செல்வி வி கிருஷ்ணவேணி செல்வி எஸ் அனுசுயா ஆகியோர் பருத்தித்துறைமாவட்ட நீதிமன்றத்திலும், செல்வி கே நிமலவேணி பருத்தித்துறை நீதவான் நீதிமன்றத்திலும் கடந்த வாரம் சுருக்கெழுத்தாளர்களாகப் பதவியேற்றுள்ளனர்.

## மரண அறிவித்தல்
### திருமதி இராமசாமி தங்கம்மா

திருமதி இராமசாமி தங்கம்மாகாலமாகிவிட்டார் இவர் காலஞ்சென்ற இராமசாமி அவர்களின் மனைவியும், காமாட்சியம்மாவின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற மிருதங்க வித்துவான் வே, அம்பலவாணர் அவர்களின் மாமியாரும் ஆவார். அன்னாரின் பூதவுடல் இன்று 20-9-84 வியாழக்கிழமை காலை 10-00 மணிக்கு இல. 2, நாச்சிமார் கோவிலடி இல்லத்தில் இருந்து தகனக்கிரியைக்காகக் கோம்பையன் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

(1836) தகவல்: பேரப்பிள்ளைகள்.

இப் பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன்கோவில் மேற்கு வீதி, 63ம் இலக்க அச்சகத்தில் 1984ம் ஆண்டுசெப்டம்பர் மாதம் 20ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post office Sri Lanka under number B 100236/81 Eelanadu P. O. Box 49, Telegram Eelanadu Telephone 22389 - 24126.